BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Org.nr: 980 305 414

ISSN 2703-8440

Radio Tamil Bergen,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Bergen Tamilsk Avis - no.02 - March 2021 - தேன்தமிழிதழ் - மாதஇதழ் - இல.02 பங்குனி, 2021

உறவுகளுக்கு வணக்கம்

உலக தாய்மொழி தினம் மாசி 21இல் தேன் தமிழ் இதழ் முதற் பத்திரிகையினை உங்கள் சிந்தைக்கு தந்தமையினையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். அதனது பிரதிபலிப்பாக உங்களிடமிருந்து எமக்கு கிடைத்த விமர்சன அலை எம்மை பிரமிக்க வைத்தது. அத்தனை விமர்சனப் பதிவுகளும் எம்மை இன்னுமாக உற்சாகப்படுத்தி இருக்கிறது.

இதழின் முக்கியத்துவம், தரம், அதனது தொடர்ச்சி, காலத்துக்கொப்பான பதிவுகள், மொழிபெயர்ப்பு படைப்புகள், படைப்பாளிகளின் வரலாற்று பதிவுகள், நிழற்படங்கள், அவற்றின் அவசியம், அவை பேசுகின்ற விடயங்கள் என்பனவோடு, மேலதிகமாக இதழ் எடுத்து வரவேண்டிய அல்லது தாங்கி வரவேண்டிய பல ஆலோசனைகளை தந்துள்ளீர்கள். அத்தனை விமர்சனப் பதிவுகளும் எம்மை இன்னமும் பொறுப்புடன் செயற்படப் பணித்திருக்கிறது.

நள்ளிரவுச் சூரியதேசமான நோர்வே நாட்டிலிருந்து வெளிவரும் முதல் மின்னிதழான தேன் தமிழிதழ் இந்நாட்டின் கலை, இலக்கிய, கல்வி, கலாச்சார, சுகாதார, அரசியல், சமூகப் பதிவுகளையும், இவை அனைத்துக்கும் உழைத்து வருகின்ற பணியாளர்களின் வரலாற்றுப் பதிவுகளையும் எடுத்து வரவிருக்கிறது. அத்தோடு நாம் வாழுகின்ற நாட்டிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள், அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளம். அவற்றுக்கான தேடலும் பதிவுகளும் அவசியமாகிறது.

தாயகத்தில் நிகழ்பவை, அங்குள்ள தற்கால இலக்கிய படைப்புகள், மற்றும் கலைஞர்கள், சமூக பணியாளர்களினது வரலாற்றுப் பதிவுகள் அனைத்தும் நம் மத்தியில் பகிரப்படவேண்டும். நீண்டகால போர்ச்சூழலுக்குள்ளும் சமூக அக்கறையோடு பணியாற்றி வருபவர்கள், எமது பாரம்பரிய கலை வடிவங்களை அழிய விடாது எத்தனையோ இடப்பெயர்வுகளுக்குள்ளும் அவற்றினை தமது தோள்களில் சுமந்துகொண்டே திரிந்த கலைஞர்களின் வரலாற்றுப் பதிவுகள், அவர்களது தியாகம் நிறைந்த சாதனைகள் அனைத்தும் எழுதப்படவேண்டும்.

அதி முக்கியமாக நமது சிறுவர்கள், இளையோரின் சிந்தையில் உதிக்கும் ஆக்கங்களினை வெளிக்கொணர வேண்டும். இரு வேறு மொழிகளில் சிந்தித்து, இருவேறு கலாச்சாரத்தில் வாழ்ந்து, பல சவால்களுக்கு முகம் கொடுத்து, தாம் வாழும் சமூகத்துடன் ஒருங்கிணைந்து பக்குவமாய் நடைபோட்டுவரும் எமது அடுத்த சந்ததியினர் பேச வேண்டிய விடயங்களுக்கு இவ்விதழ் ஒரு சிறந்த தளமாய் அமைய வேண்டும்.

எமது இளையோரின் சிந்தனை பகிர்தலுக்கு மொழி ஒரு தடையாக இருத்தல் நல்லதன்று. எனவே இளையோரின் பதிவுகள் நோர்வேஜிய மொழியிலோ அல்லது தமிழ் மொழியிலோ அமைதல் அவர்களது வாசித்தல் திறன் மற்றும் எழுத்துத்திறனை அதிகரிக்கும் என நம்புகிறோம்.

தேன் தமிழிதழ் தாங்கிவரும் ஆக்கங்கள் தற்கால சூழ்நிலையில் மிக அவசியம் என்பதே சமூக நலன் விரும்பிகளின் கருத்தாக உள்ளது. கொரோனாவின் கொடூரத்தில் நின்றெம்மைக்காக்க முகக்கவசம் அணிந்து கொண்டாலும், மனத்திடன் கொண்ட மனிதர்களாய் கொடிய நோய்களுக்கும் அஞ்சாது நடந்து கொண்டிருக்கிறோம். உலக வல்லரசுகள் எல்லாம் தம் மக்களின் இழப்புக்களை கட்டுப்படுத்த முடியாது திணறடித்து நிற்கின்றன. இந்த உலகில் இதுவரை நடந்தேறிய போர்களில் இறந்த மக்கள், வீரர்களை விடவும் அதிகமான மக்கள் கொரோனா தொற்று நோயினால் இறந்து விட்டார்கள், இறந்து கொண்டும் இருக்கிறார்கள் என வல்லரசுகளே மனம் திறந்து பேசத் தொடங்கிவிட்டன. நோய்த்தொற்று பரவல் ஆரம்பித்து ஓராண்டு கழிந்த நிலையில் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பில் தடுப்பூசி உலகம் பூராவும் பகிரப்பட்டு வருகின்றது. மக்களும் கட்டம் கட்டமாக பெற்று வருகின்றனர்.

இதனால் உடல் நோய்க்கு அப்பால் உளவியல் தாக்கம் மிக கொடூரமாக நமது மக்களை தாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கட்டத்தில் அரசு, நகர சபை மற்றும் சுகாதார அமைச்சு தெரிவிக்கும் தகவல்களை கட்டுப்பாடுகளை சரிவர அறிந்து கொள்ளல் அதி முக்கியம்.

இன்றைய இந்த நிலையில், அரச, சுகாதார, நோய்த்தடுப்பு அமைப்புகளால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்களையும், தகவல்களையும் பரந்துபட்ட மக்களிடம் கொண்டு சேர்க்கும் கடமையையும் பிரதானமாகக் கருத்தில் கொண்டு செயற்பட முனைகின்றோம்.

நன்றி, வணக்கம்!

தொடர்புகட்கு:
ttoosai@gmail.com
அல்லது,
antonipillai@hotmail.com
Tlf: (0047) 924 636 74





















# Korona - covid-19

Helse- og omsorgsdepartementet




## Sosial kontakt
Alle bør begrense sosial kontakt. Det oppfordres til å møte andre utendørs, og ikke ha besøk av flere enn 5 gjesteri tillegg til de som allerede bor sammen. Dersom alle gjestene kommer fra samme husstand kan man være flere, men man må likevel ikke være flere enn at man kan holde avstand.
Barn i barnehager og barneskolerkan ha besøk fra egen kohort.

## Butikker
Alle kjøpesentre og butikker skal sørge for at det er mulig å holde minst én meters avstand.

## Restauranter, kafeer, barer
Servering av alkohol
kun til de som får servert mat. Skjenkestopp kl. 22.00.
Minst én meters avstand mellom gjester utenfor samme husstand.
Sitteplasser for alle gjester, kun bordservering av alkohol.
Det skal registreres kontaktopplysninger til de gjestene som samtykker til det.

## Ankomst Norge
Grensen er i praksis stengt for utlendinger som ikke er bosatt i Norge. Norske statsborgere har alltid rett til å komme inn i Norge.

Det gjøres unntak for personer som ivaretar kritiske samfunnsfunksjoner, personer som driver med vare og persontransport, helsepersonell fra Sverige/ Finland som arbeider i norsk helse- og omsorgstjeneste, personer som skal gjennomføre fastsatt samvær med barn, personer som ellers har helt spesielle grunner for å komme til Norge.
Alle innreisende til Norge må teste seg på grensen.
Utenlandske reisende må også fremvise negativ testtatt senest 24 timer før innreise til Norge.

Alle innreisende til Norge må registrere seg før de krysser grensen.
Alle innreisende må i karantene på egnet sted eller på karantenehotell.
De som ikke oppholder seg på karantenehotell plikter å teste seg på døgn sju. Også hus-standsmedlemmer som bor sammen med en person i innreisekarantene bør som regel gå i karantene. De bør også teste seg på dag sju etter innreise selv om de ikke selv har vært i karantene.
Det finnes enkelte unntak fra disse kravene for personer som ankommer Norge.

## Reiser
Reiser til utlandet frarådes. Unngå unødvendige reiser innenlands.
Reiser til studiested kan regnes som en nødvendig reise.
Man kan reise på hytta (eid eller leid) eller hotell innenlands, men unngå kollektivtransport hvis det er mulig. Personer som reiser til kommuner med mindre strenge tiltak bør som en hovedregel følge anbefalingene som gjelder i kommunende bor i til vanlig.

## Arrangementer
Arrangementer som samler personer fraulike kommuner bør utsettes eller avlyses.

Regler for arrangement:
--------------------------------

Maks ti personer på private sammenkomster utenom i eget hjem, som for eksempelen bursdag i leid lokale.

Maks ti personer på innendørs arrangement,likevel 100 personer hvor alle i publikum sitterpå faste tilviste plasser.
Maks 50 personer på innendørs idrettsarrangement for barn og unge under 20 år som kun samler deltakere fra samme kommune.

Maks 200 personer på arrangementer utendørs,likevel 3x200 personer hvor alle i publikum sitter på faste tilviste plasser.

Servering av alkohol kun til de som får servert mat, skjenkestopp kl 22.00.

## Idretts- og fritidsaktiviteter
Barn og unge under 20 år kan trene og delta på fritidsaktiviteter som normalt, og det åpnes for idrettsarrangementer som samler deltakere fra samme kommune.

Dersom barn og unge trener med et idrettslag i en annen kommune, vil de kunne konkurrere med dette idrettslaget så lenge smittesituasjonen tillater det. I individuelle utendørsidretter som ikke innebærer nærkontakt kan konkurransene samle deltakere fra idrettskretsen/region.

Voksne over 20 år i breddeidretten anbefales å ikke drive organisert aktivitet innendørs. Utendørs kan voksne trene dersom det er mulig å holde god avstand.

Toppdrettsutøvere kan trene som normalt, både uten-dørs og innendørs. Seriespill i toppidretten anbefales fortsatt utsatt.

Toppidrettsarrangementer tillates, men med unntak av seriespill.

## Skoler og barnehage
Barnehagene og skolene er på gult nivå.

## Høyere utdanning
Studenter og elever kan være fysisk til stede ved undervisning på universiteter, høyskoler og fagskoler med forsterkede smitteverntiltak.

Også lesesaler og bibliotek kan holde åpent med smitteverntiltak.
Alle planlagte arrangementer bør være digitale, og større forelesninger og sammenkomster bør unngås.

Studenter i områder uten høy smitte bør få mulighet til fysisk undervisning minst en gang i uken når det er mulig å gjennomføre i mindre grupper og i tråd med smittevernveilederne.

## Arbeidsplasser
Hjemmekontor for alle som har mulighet til dette.

## சுகாதார மற்றும் பராமரிப்பு சேவைகள் அமைச்சகத்தின் மேற்படி அறிவுறுத்தலின் சுருக்கமான தமிழ் வடிவம்

சமூகத் தொடர்பு:
சமூகத் தொடர்பு கட்டுப்படுத்தப்பட வேண்டியது அவசியம். அங்கத்தவர்களுக்கான சந்திப்புக்களை வெளியிடங்களில் வைத்துக் கொள்வது நல்லது. வீட்டிலுள்ளவர்களை தவிர்த்து அதிகபட்சம் ஐந்து நபர்கள்/விருந்தினர்கள் சந்திக்கலாம். வருகை தருபவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களானால் இந்த எண்ணிக்கை அதிகமாகலாம். கொடுக்கப்பட்ட சமூக இடைவெளியை வீட்டிலும் கடைப்பிடிப்பது அவசியம்.

கடைகள்:
முக்கிய விதி முறையான ஒரு மீட்டர் இடைவெளியினை கடைப்பிடிக்கும் பட்சத்தில் அனைத்துக் கடைகளும் திறக்கப்படலாம்.

உணவகங்கள் மது கூடங்களில் உணவு அருந்துவோருக்கு மட்டும் மது வழங்கப்படும். இரவு 10மணி வரை மது வழங்கப்படும். அனைத்து விருந்தினர்களுக்கும் இருக்கைகள் அவசியம். விருந்தினர்களின் ஒப்பந்தத்துடன் அவர்களின் தொடர்பு தகவல்கள் பதிவு செய்தல் அவசியம்.

வெளிநாட்டவர்கள் நோர்வேக்குள் வருவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு, மக்கள்/பொருட்கள் போக்குவரத்துக்கு உதவுபவர்களுக்கு, சுகாதார பணியாளர்களுக்கு, உடல்நலம் மற்றும் பராமரிப்பு துறையில் பணிபுரிபவர்களுக்கு, குழந்தைகளுடன் தொடர்பு கொள்ள விரும்பும் பெற்றோருக்கு, முக்கியமான விடயங்களுக்காகவும் நோர்வேயுள் வருபவர்களுக்கு பொருந்தாது. அதேவேளை நோர்வேஜிய குடிமக்கள் நோர்வேயுள் வருவதற்கு எப்பொழுதும் உரிமை உண்டு.
நோர்வேயுள் வரும் அனைத்து பயணிகளும் கொரோனா பரிசோதனை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பயணம்:
வெளிநாட்டுப் பயணம் பரிந்துரைக்கப்படவில்லை.
தேவையற்ற உள்நாட்டு பயணத்தைத் தவிர்க்கவும்.
கல்வி கற்கும் இடத்திற்கு பயணம் செய்வது அவசியமாகும்.
நீங்கள் உள்நாட்டில் விடுதிகளுக்கோ அல்லது ஹோட்டலுக்கு பயணம் செய்யலாம், ஆனால் பொது போக்குவரத்தை முடிந்தவரை தவிர்க்கவும்.

விளையாட்டு மற்றும் ஓய்வு நடவடிக்கைகள்:
20 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் சாதாரணமாக பயிற்சி நடவடிக்கைகளில் பங்கேற்கலாம், மேலும் அதே நகராட்சியில் இருந்து பங்கேற்பாளர்கள் விளையாட்டு நிகழ்வுகளுக்குச்



# சர்வதேசப் பெண்கள்தின அறைகூவல்...

எழுத்தாளரும், ஊடகவியலாளரும், பெண்கள் சிறுவர்களுக்கான உரிமைச் செயற்பாட்டாளருமான, இலங்கை இளையோர் விழிப்புணர்வு அமைப்பின் செயலாளரார் திருமதி ப்ரியமதா பயஸ் அவர்கள் உலக மகளிர் தினத்துக்காக விடுத்த உரை

இன்றைய நாளில் அனைத்துப் பெண்களுக்கும் பெண் உரிமைக்காகப் போராடிக் கொண்டு இருப்பவர்களுக்கும் பெண்களுக்காகக் குரல் கொடுத்துக்கொண்டு இருப்பவர்களுக்கும், இந்த சமூகத்தில் பெண் அடக்குமுறைக்கு எதிராகப் போராட தயாராக இருப்பவர்களுக்கும் என் வாழ்த்துக்கள்.

இந்த சமூகத்தில் காலம்காலமாக பெண்களுக்கான போராட்டங்கள் பெண்களின் வன்முறைகளுக்கு எதிரான போராட்டங்கள் பெண்கள் துன்பப்படுத்தல்களுக்கு எதிரான போராட்டங்கள் எல்லாமே நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.
பல இடங்களில் வெற்றிகண்டு இருக்கின்றனர் சில வேளைகளில் அவற்றை உரிய இடங்களுக்கு கொண்டு செல்ல முடியாமல் தள்ளாடி கைவிட்டும் இருக்கிறார்கள்.

நாங்கள் இப்போது ஒரு புதிய யுகத்தில் இருக்கின்றோம். காலம்காலமாக நாம் பாரம்பரியங்களோடு கட்டிக்காத்த சில விடயங்களை கைவிட்டுக்கூட இப்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக போராடத் துணிந்திருக்கிறோம்.

அந்த வகையில் போராட்டங்கள் மூலம் சில விடயங்களைப் பெற்றாலும், சில விடயங்களை மனங்களில் இருந்துதான் பெறவேண்டும் என்கின்ற தீர்க்கமான முடிவை நான் உறுதியாக நம்புகின்றேன்.

என்னைப் பொறுத்தவரையில் சட்டங்கள் எங்களை காப்பாற்றலாம், சட்டங்களின் மூலம் சில விடயங்களை நாங்கள் கையாளலாம், ஆனால் மனங்கள் வலுவாக இருக்க வேண்டும். எல்லா மக்களும் மனித நேயத்துடன் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே பெண்களுக்கான நீதியை மட்டுமல்ல, இந்த சமூகத்தில் இருக்கின்ற அனைத்து மனிதர்களுக்குமான நீதியை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

சமூகம் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும், சமூகத்தில் நடக்கும் சம்பவங்கள் அனைத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பது விருப்பமாக இருந்தாலும், அண்மையில் இடம்பெற்றுள்ள சில சம்பவங்கள், வடக்கு கிழக்கில் இடம்பெற்ற சில விடயங்கள் மிகுந்த மன உளைச்சலைப் பலருக்கு ஏற்படுத்தியிருந்தது.

அது ஒரு விழிப்புணர்வாகக்கூட பரப்பப்பட்டிருந்தமை அனைவரும் அறிந்த விடயம். அந்த விடயத்தை இலங்கையில் உள்ள சமூக ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் என அனைத்து ஊடகங்களும் அதை வெளிப்படுத்தியிருந்தன. அந்தச் செயற்பாடுகளுக்காக் குரல்கொடுத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அப்படியான சம்பவங்கள் இனிமேல் ஏற்படாத வண்ணம் பாதுகாக்க வேண்டும் என்கின்ற திடசங்கற்பத்தை இன்று மார்ச் 8ஆம் திகதி நாம் எடுத்துள்ளோம்.

அந்த வகையில் இலங்கை இளையோர் விழிப்புணர்வு இயக்கம் என்கின்ற அமைப்பினூடாக நாம் இத்தகைய செயற்பாடுகளின் மூலம் ஓரளவுக்கேனும் தீர்வை எட்டத் தீர்மானித்துள்ளோம். அதற்காக நாம் ஒரு அறிவித்தலை வெளியிட்டுள்ளோம். அந்த அறிவித்தலை அனைவரும் பார்வையிடுங்கள். பெண்களுக்கு எதிரான பிரச்சனைகள், பெண்களுக்கு இருக்கின்ற அழுத்தங்கள், அவர்களுக்கு ஏற்படுகின்ற உளவியல் பிரச்சனைகள், சமூக பொருளாதார நெருக்கடிகள் இவற்றுக்கு ஒரு தீர்வுகாண இலங்கை இளையோர் விழிப்புணர்வு இயக்கம் தயாராக இருக்கின்றது. அவர்கள் கண்டிப்பாக உங்களை நல்மனதுடன் அணுகுவார்கள். உங்களுடன் இணைந்து செயற்படுவார்கள். உங்களுடைய ஒவ்வொரு பிரச்சனைகளையும் நல்மனதுடன் அணுகி உளவியல் நெருக்கடிகளை தீர்த்து வைப்பார்கள்.

இந்த உளவியல் நெருக்கடிகளில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளால் மிகப் பாரிய நெருக்கடிகளை எதிர்காலம் சுமக்கப் போகின்றது என்பது பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

எதிர்கால சந்ததி பெண்களுக்கு ஏற்படுகின்ற மன உளைச்சல்கள் மூலம் கண்டிப்பாக பாதிக்கப்பட போகின்றது. இதற்கு விஞ்ஞான ரீதியாக, சமூகரீதியாக, உளவியல் ரீதியாக, மருத்துவரீதியாக, அறிவியல் ரீதியாக விளக்கங்கள் நிறைய இருக்கின்றன. இதனை ஆராய்ந்துபார்த்தல் உண்மை விளங்கும்.

ஒரு பெண் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படும்போது ஒரு குடும்பம், அந்த குடும்பத்தில் இருக்கின்றவர்கள் எவ்வளவுக்கு பாதிக்கப்படுவார்கள் என்பதை உளவியல் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

ஒரு பெண் இக்கட்டான சூழலில் இருக்கும் போது ஒரு குடும்பத்தைச் சரியாகப் பார்க்க முடியாது. ஒரு பெண் தலைமைதாங்கும் குடும்பத்துக்கு இது பெரும் நெருக்கடியை, இக்கட்டான சூழலை ஏற்படுத்தும்.

இந்த விடயங்கள் அனைத்தும் தீர்க்கப்படவேண்டும். அதற்காக இலங்கை இளையோர் விழிப்புணர்வு இயக்கம் மூலம் நாம் தீவிரமாக போராடுகிறோம்.

குறிப்பாக பெண்களுக்கு ஏற்படுகின்ற அனைத்துப் பிரச்சனைகளுக்காக குரல்கொடுக்கவும், கைகொடுக்கவும் நாம் தயாராக இருக்கிறோம். அதற்கான அறிவித்தலை இதனோடு இணைக்கின்றோம் .

எல்லோரும் மனதளவில் தைரியமாக இருங்கள், மனதளவில் தைரியமாக இருக்கின்ற ஆணுக்கோ பெண்ணுக்கோ பிரச்சனைகள் அனைத்தும் தூசு போன்றது, நீங்கள் எவ்வளவுக்கு நோய்வாய்ப்பட்டு இருந்தாலும் மனதைரியம் இருந்தால் நீங்கள் மீண்டு வந்துவிடமுடியும்.

மனத்தைரியம் என்பது உளவியல் சார்ந்தது. அது உடலைக்கூட வலுப்படுத்தும் சக்தியையும் கொண்டுள்ளது.

எனவே எந்தப் பிரச்சனைக்கும் உடனடியான தீர்வு உங்களை அழித்துக்கொள்வதோ, அல்லது உங்களை மற்றவர்களிடம் இருந்து ஒதுக்கி வைத்துக்கொள்வதோ அல்ல. உங்களுக்கான தீர்வுகள் ஏலவே எங்கள் சமூகத்தில் விதைக்கப்பட்டுள்ளது.

தீர்வுகள் என்பது எமக்காக நாம் எடுக்கும் முடிவுகள் மட்டுமல்ல, எம்மைச் சார்ந்து இருப்பவர்களும் எமக்கான தீர்வுகளை எடுப்பதற்கு அத்தனை தகுதிகளையும் உரிமைகளையும் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறக்க கூடாது. நாம் தனி மனிதர்கள் இல்லை. ஒவ்வொருவரும் சமூகத்தோடு இணைக்கப்படடவர்கள்தான்.

இந்த சமூகம் இல்லாமல் யாரும் இல்லை. யாரும் தனிமனிதர்கள் இல்லை. இந்த சமூகம் எமக்காக இருக்கின்றது என்கின்ற எண்ணம், ஒரு ஒற்றுமை மனப்பான்மை உங்கள் மனதில் எழவேண்டும். நான் தனிமைப் படுத்தப்பட்டவள், தனிமைப்படுத்தப் பட்டவன் என்கின்ற உணர்வு ஒருபோதும் உங்களுக்கு ஏற்படவேண்டாம்.

எல்லாவற்றுக்கும் தீர்வு இருக்கின்றது தயவு செய்து மனதளவில் அனைவரும் தைரியமாக இருங்கள். அது உங்கள் உடலைக்கூட பலமாக வைத்திருக்கும். சமூக வலைத்தளங்களில், ஊடகங்களில் எங்களால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலை பார்வையிடுங்கள். பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் எங்களாலான உதவிகளை வழங்க நீங்களும் எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்.

நன்றி.



# சர்வதேசப் பெண்கள்தினம் (1913)
# Alexandra Kollontai



(ருஸ்சிய புரட்சியாளரான அலக்சான்ட்ரா கொலந்தாய் (Alexandra Kollontai) அவர்கள் 1913இல் பிரகடனம் செய்த 'சர்வதேசப் பெண்கள் தினம்' என்ற இந்தக் கட்டுரையைத் தமிழில் பதிவு செய்வதில் நாம் பெருமை கொள்வதோடு, Alexandra Kollontai பற்றிய சிறு குறிப்பையும் இங்கே தருகின்றோம் –பானுபாரதி-)

## அலக்சான்ட்ரா கொலந்தாய் - Alexandra Kollontai



ருஸ்சியப் புரட்சியாளரான அலக்சான்ட்ரா கொலந்தாய் 1872இல் சென் பீட்டர்ஸ் பேர்க்கில் பிறந்தவர். இவரது தந்தை ரஸ்யப் படையில் இராணுவத் தளபதியாக இருந்தார்.
தாயார் பின்லாண்ட்டைச் சேர்ந்த ஒரு பண்ணை உரிமையாளரது மகள். அந்த நேரம் பின்லாண்ட் ரஸ்யாவினது ஒரு பகுதியாக இருந்தது. இவர் தனது கல்வியை அங்குதான் தொடர்ந்தார். இந்த வேளையில்தான் தொழிலாள வர்க்கத்தினரதும், விவசாயிகளினதும் பிரச்சனை பற்றி அறிந்து கொள்கிறார்.

1893ல் தனது மைத்துனரைத் திருமணம் செய்துகொண்டவருக்கு குடும்ப வாழ்க்கை மிகுந்த ஏமாற்றத்தையே தந்தது. வீட்டுக்குள்ளே தான் சிறைப்படுத்தப் பட்டதாக உணர்கிறார். ஒரு பெரிய நெசவாலை ஒன்றின் கண்காணிப்பின்போது தொழிலாளர் குடியிருப்பொன்றில் இறந்து கிடந்த சிறுவனொருவனைக் காண்கிறார். இந்த நிகழ்வு அவரது வாழ்க்கையின் ஒரு திருப்புமுனையாக, அவரை ஒரு புரட்சியாளராக மாற்றியதெனலாம்.

1890களின் பின்னதாக அரசியலில் ஈடுபடத் தொடங்கும் கொலந்தாய் 1898ல் தனது குடும்ப வாழ்க்கையை விட்டு வெளியேறியபின் அரசியல் பொருளாதாரம் கற்பதற்காக சூரிச் செல்கின்றார். 1914களிலிருந்து போல்சிவிக் கட்சியில் இணைந்து செயற்படுகின்றார். அவரது முதலாவது படைப்பான "குழந்தைகளும் அவர்களது சுற்றாடலுக்கும் இடையிலான அபிவிருத்தி" மார்க்சிய சஞ்சிகையான "Obrazovaniie" இல் வெளியாகியது. லெனினது மத்திய கமிட்டியின் ஒரேயொரு பெண் உறுப்பினர். தொடர்ந்த அவரது செயற்பாடுகளில் சர்வதேச பெண்களியக்கத்தின் செயலாளராகவும் புரட்சிக்குப் பின்னர் அரசின் சமூக காப்புறுதியில் மக்கள் ஆணையாளராகவும், சோவியத் குடியரசின் ஸ்கன்டிநேவியன் நாடுகளுக்கான தூதுவராகவும், ராஜதந்திரியாகவும் பணியாற்றினார்.

## பெண்கள்தினம் என்பது என்ன? - Alexandra Kollontai



உண்மையில் அப்படியொன்று தேவைதானா? இது மத்தியதரவர்க்கப் பெண்களினதும், பெண்களினது வாக்குரிமைக்காகப் போராடியவர்களினதும் நாளாக ஒப்புக் கொள்ளப் பட்டதில்லையா? இது தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமைக்குப் பாதகமான விடையம் இல்லையா? இவ்வாறான மாறுபட்ட கருத்துக்கள், ஆட்சேபனைகள் இன்னமும் ருஸ்யாவில் கேட்ட வண்ணம்தான் இருக்கின்றன. ஆனால், வெளிநாடுகளில் இத்தகைய ஆட்சேபனைகள் தற்போது எழுவதில்லை. அங்கே தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வாழ்க்கையைப் பற்றிய தெளிவான பதில்களை அவர்கள் கொண்டுள்ளனர்.

பெண்கள் தினம் என்பது பெண் தொழிலாள இயக்கத்தின் நீண்ட இறுக்கமான ஒரு சங்கிலியின் பிணைப்புப் போன்றது. ஒழுங்கமைக்கப்பட்ட பெண் தொழிலாளர் படையின் படிப்படியான உழைப்பினால் உருவாக்கப் பட்டுள்ளது. இருபது வருடங்களுக்கு முன்பு சிறிதளவிலான தொழிலாளப் பெண்களே இங்கும் அங்குமாக தொழிற் சங்கங்களிலும் கட்சிகளிலும் இணைந்திருந்தனர். இப்போது 2,92000 இற்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் ஐரோப்பிய தொழிற்சங்கங்களில் இருக்கின்றனர். ஜேர்மன் தொழிற் சங்கத்தில் இரண்டுலட்சம் உறுப்பினர்களும், ஒருலட்சத்து ஐம்பதாயிரம்பேர் தொழிற் கட்சியிலும், ஒஸ்றியாவில் 47,000 உறுப்பினர்கள் தொழிற் சங்கத்திலும், இருபதாயிரம் உறுப்பினர்கள் கட்சியிலும் அங்கம் வகிக்கின்றனர். இத்தாலி, ஹங்கேரி, டென்மார்க், ஸ்வீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் பெண்கள் அமைப்பாக ஒன்று பட்டனர். சோசலிசப் பெண்கள் அமைப்பில் அங்கம் வகிக்கும் பெண்கள் ஒரு மில்லியன் ஆகும். எத்தகைய மிகப்பெரிய பலம் வாய்ந்த சக்தி! இத்தகைய பலம் பொருந்திய சக்தியின் குரலுக்கு வாழ்க்கைச் செலவு, குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சனைகள், பெண் தொழிலாளர்களது உரிமைகளைப் பேணுவதற்குரிய சட்டங்களைப் பேணுதல் போன்ற அது எழுப்பும் கேள்விகளுக்கு உலகை ஆள்பவர்கள் பதிலளிக்க வேண்டியவர்களாகின்றனர்.

ஒரு காலத்தில் உழைக்கும் ஆண் தொழிலாளர்கள் தாங்கள் மட்டுமே முதலாளித்துவத்துக்கு எதிரான யுத்தத்தை தனித்துத் தமது தோளிலே சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்று கருதினர். அதன் அடிப்படையில் பழமை வாத உலகத்திற்கெதிரான யுத்தத்தில் தங்கள் பெண் மக்களின் பங்கேற்றலை நிராகரித்து தனித்து நின்றனர். ஆயினும் தொழிலாள வர்க்கப் பெண்கள் தங்கள் உழைப்பு சக்தியை விற்பனை செய்ததன் மூலம் உழைப்பு சந்தையில் பெண் தொழிலாளர்களது தேவை அதிகமாகியது. தொழிலாள வர்க்கத்துப் பெண்களும் உழைப்பில் ஈடுபட்டனர். தொழிற் சங்கத்துச் செயற்பாடுகள் உழைப்புச் சுரண்டல் பற்றிய எந்தவித தெளிவுமற்ற தொழிலாள வர்க்கத்துப் பெண்களால் தொழிற்சங்கச் செயற்பாடுகள் செயலிழந்து போகும் அல்லது பின் தள்ளப்படும் என்ற கருத்தே ஆண்களிடம் இருந்தது.

ஆனால் சட்ட ரீதியாகவும், சமூகத்திலும் எந்தவித உரிமைகளுமற்று காலங்காலமாக அடுப்போடும் கணவனதும் தந்தையினதும் பணிப்பின் பேரில் சகல பணிகளையும் நிறைவேற்ற நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்களுக்கு தொழிற்சங்க செயற்பாடுகள் பற்றியோ, உலக நடப்புக்கள் பற்றியோ என்ன தெளிவு இருந்துவிட முடியும்?



இத்தகைய பின்னடைவுகளும், எந்தவித உரிமைகளுமற்று பெண்கள் கீழ்ப்படுத்தப் படும் நிலமைகளும் அதனாலேயே அவர்களிடமுள்ள அசிரத்தையான தன்மைகளும் தொழிலாள வர்க்கத்தினர்க்கு அனுகூலமானதாக இருக்கவில்லை. அதேவேளை இவை நேரடியான பாதிப்புக்களை ஏற்படுத்தவே செய்யும். ஆனால் பெண் தொழிலாளர்களை எவ்வாறு அமைப்பில் ஈடுபடுத்துவது?, அவர்களை எவ்வாறு விழிப்படையச் செய்வது?

ஏனைய நாடுகளில் சோசலிச ஜனநாயக அடிப்படையில் தற்காலிகமாகவேனும் இத்தகைய கேள்விகளுக்கு எதுவித தீர்வும் இருக்கவில்லை. தொழிற்சங்க அமைப்புக்களின் கதவுகள் பெண்களுக்காகத் திறந்து விடப்பட்டபோதும் மிகக் குறைந்தளவிலான பெண்களே அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொண்டனர். ஏன் இந்த நிலமை? தொழிலாள வர்க்கம் பெண் தொழிலாளர்கள் சட்ட ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மிகவும் கீழ்ப்படுத்தப்பட்ட பிரிவினராக இருப்பதை ஆரம்பத்தில் புரிந்து கொள்ளவில்லை. நூற்றாண்டு காலமாக பெண்கள் வன்முறைக்குள்ளாக்கப் பட்டும், பயமுறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டுமிருந்த சூழலிலிருந்து அவர்களை வெளியே கொண்டு வருவதற்கு சிறப்பான அணுகுமுறைகளும், மிகுந்த ஊக்கவிப்பும் தேவை என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

அத்தோடு உழைப்பில் ஈடுபடும் ஒரு பெண் தாயாகவும், மனைவியாகவும் இருக்க வேண்டியவளாகின்றாள் என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் எப்பொழுது தொழிலாளர்களின் சோசலிசக் கட்சி இதைப் புரிந்து கொண்டதோ அந்த நேரமே அவர்களது பிரச்சனைகளுக்காகக் குரல் கொடுத்ததுடன் தம்மோடு இணைத்தும் கொண்டது. ஏனைய நாடுகளிலும் சோசலிசவாதிகள் பெண் தொழிலாளர்களுக்கான விசேடமான பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும், குழந்தைகளுக்கும் பெண்களுக்குமான உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் எனவும், பெண்கள் அரசியலில் ஈடுபடவும், அதனூடாக தங்களது உரிமைகள், பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தக் கோரியும் குரல் கொடுத்தனர்.

எந்தளவிற்கு தொழிற்கட்சி பெண் தொழிலாளர்கள் பற்றி அதிகளவான அக்கறை கொண்டதோ, அந்தளவிற்கு அதிகளவிலான பெண்கள் தொழிற் கட்சியோடு இணைந்து கொண்டனர். பெண்கள் என்ற ரீதியில் தாங்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சனையை உணர்ந்துகொண்டு தமக்காகவும் குரல் கொடுப்பதால், தொழிற்கட்சி தங்களது விடுதலைக்காகவும் போராடுகின்ற அமைப்பு என்பதில் பெண்கள் நம்பிக்கை கொண்டனர். பெண் தொழிலாளர்கள் தமக்குள் அமைப்பாக ஒன்றுபட்டு தங்களது இலக்கை எட்டுவதற்குக் கடுமையாக உழைத்தனர். அதிகளவிலான பெண் தொழிலாளர்கள் சோசலிசக் கட்சியில் இணைந்து கொண்டனர். வேறுசில நாடுகளில் கட்சியில் பெண்கள் பிரிவென தனியாக அமைக்கப்பட்டு, பல்வேறு நிர்வாக அலகுக-ளாகப் பிரித்து பெண்களாலேயே நிர்வகிக்கப் படுகின்றது.

இவர்கள் தொழிற்சங்கத்திலோ அல்லது பெண்கள் அமைப்புக்களோடோ இணைந்து கொள்ளாத பெண்கள் மத்தியிலும் பணி புரிகின்றனர். கர்ப்பிணித் தாய்மாருக்கான உதவி, சிறுகுழந்தைகளைக் கொண்ட தாய்மாருக்கான உதவி, பெண்களுடைய உழைப்புத் தொடர்பான சட்ட ஒழுங்குகள், பால்வினைத் தொழிலில் பெண்களை ஈடுபடுத்துவதற்கு எதிரான நடவடிக்கைகள், குழந்தைகளின் இறப்பு வீதம், பெண்களுடைய அரசியல் உரிமைகளுக்கான பிரேரணைகள், அதிகளவிலான வாழ்க்கைச் செலவீனத்துக்கு எதிரான தீர்மானங்கள், அடிப்படை வீட்டு வசதிகள் போன்றவற்றை முன்நிறுத்தி இயங்குகின்றனர்.

கட்சியிலுள்ள பெண் தொழிலாளர்கள் பொதுவான விடையங்களுக்காக கட்சியுடன் இணைந்து செயலாற்றும் அதேவேளை, பெண்ணுரிமைக்காகவும் உழைத்தார்கள். பெண்களது கோரிக்கைகளுக்காக கட்சியும் இணைந்து குரல் கொடுத்தது. உழைக்கும் பெண்களின் கோரிக்கைகள் கட்சியின் வேலைத் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. பெண்கள் தினத்திலன்று இன்னமும் கிடைக்கப் பெறாமல் இருக்கும் உரிமைகளுக்காக பெண்கள் குரல் கொடுக்கின்றனர். ஆனால் சிலர் கேட்கின்றனர் 'பெண்கள் ஏன் இவ்வாறு குரல் எழுப்புகின்றனர்?, ஏன் பெண்களுக்கான தினம் நினைவு கூரப்பட வேண்டும்?' சோசலிசப் பெண்கள் இயக்கத்திற்கும், மத்தியதர வர்க்கப் பெண்ணிய வாதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாதவர்களால்த் தான் இவ்வாறான கேள்விகளை எழுப்ப முடியும்.

மத்தியதர வர்க்கத்துப் பெண்ணியவாதிகளது இலக்கு என்ன? தங்களது சமூகத்தினுள், தங்களது தந்தையருக்கும், சகோதரருகளுக்கும், கணவனுக்கும் இருக்கக்கூடிய சகல உரிமைகளையும் அதிகாரத்தையும் பெற்றுக் கொள்வதே அவர்களது இலக்காகும். ஆனால் சொத்துரிமைகள், பிறப்பு சார்ந்த எல்லா விதமான சலுகைகளையும் இல்லாமல்ச் செய்வதே பெண் தொழிலாளர்களது இலக்காக இருந்தது. தொழிலாள வர்க்கப் பெண்களைப் பொறுத்த வரையில் முதலாளி ஸ்தானத்தில் இருப்பவர் ஆணா பெண்ணா என்பதெல்லாம் முக்கியமற்றது. ஏனைய தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து ஒரு உழைப்பாளியாக தன்னுடைய தனித்துவத்தை அவளால் பேண முடியும்.

மத்தியதர வர்க்கத்துப் பெண்ணியவாதிகள் எல்லா இடத்திலும், தமக்கான சம உரிமைகளைக் கோருகின்றனர். தொழிலாள வர்க்கத்துப் பெண்கள் ஆண் பெண் உட்பட ஒவ்வொரு பிரஜைக்குமான உரிமைகளைக் கோருகின்றனர். ஆனால் ' நாங்கள் உழைப்பாளர்களாக மட்டுமல்லாது, நாட்டின் பிரஜையாக இருப்பதுடன் பெண்ணாகவும் தாயாகவும் இருக்கின்றோம் என்பதையும் மறந்து விடவில்லை. ஒரு பெண்ணாக, தாயாக எதிர்கால சந்ததியினரை எமது கரங்களிலே சுமந்துகொண்டு முன்னேறுகின்றோம். ஆகவே குழந்தைகளுக்கும் எங்களுக்குமான பாதுகாப்பையும் அக்கறையையும் அரசிடமிருந்தும், சமூகத்திடமிருந்தும் நாங்கள் கோருகின்றோம்.'

பெண்ணியவாதிகள் அரசியல் உரிமைகளுக்காகக் கடுமையாகப் போராடுகின்றனர். ஆனால் இங்கேதான் எமது வழிகள் வேறு படுகின்றன. மத்தியதர வர்க்கத்துப் பெண்களைப் பொறுத்தவரை அரசியல் உரிமை என்பது தொழிலாள வர்க்கத்தின் உழைப்பினால் பெறப்படுகின்ற இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப் பட்டிருக்கும் உலகத்துள் தங்களை இணைத்துக் கொள்வதற்கான ஒரு வழி மட்டுமேயாகும். ஆனால் நேர்மாறாக தொழிலாளப் பெண்களைப் பொறுத்தவரை அரசியல் உரிமை என்பது சமதர்மத்தை நோக்கிய கடினமானதும், வலிகள் நிறைந்ததுமான நீண்டதொரு பாதையாகும்.

மத்தியதர வர்க்கப் பெண்ணியவாதிகளும் தொழிலாள வர்க்கப் பெண்களும் பயணிக்கின்ற இந்த இரு வழிகளும் நீண்ட காலமாக தனித்தனியாகவே பிரிந்து செல்கின்றன. இது மிகவும் வெவ்வேறான இலக்குகளை நோக்கிய வாழ்முறைக்கு கொண்டு சென்றுள்ளது.

ஒரு தொழிலாள வர்க்கப் பெண்ணுக்கும் பண்ணை எஜமானிக்கும் வீட்டு வேலை பார்க்கும் பெண்ணுக்கும், அவளது எஜமானிக்குமிடையில் அவரவரது ஈடுபாடுகள் என்பவற்றிற்கிடையில் மிகப் பெரிய முரண்பாடுகளே காணப் படுகின்றது. ஆகவேத-ான் தொழிலாள வர்க்கத்து ஆண்கள் பெண்கள் தினத்தையிட்டோ அல்லது பெண்கள் மாநாடு பற்றியோ அச்சமடையத் தேவையில்லை.

ஒவ்வொரு விசேடமானதும் முற்றிலும் வேறானதுமான தொழில் முறைகள் தொழிலாளப் பெண்கள் மத்தியில் அவர்களது செயற்படும் தன்மையை உயர்த்திப் பிடிக்கவும், ஒரு சிறந்த எதிர் காலத்துக்காக உழைப்பவர்களின் வரிசையில் சேர்ந்து கொள்வதற்குமான வழிகளாகின்றது.

பெண்கள் தினமும், பெண் தொழிலாளர்களது சுய பிரக்ஞையை ஏற்படுத்துவதற்குமான ஆழமான நீண்டகால செயற்பாடுகளும் பிளவு படுத்தப்பட வேண்டியவையல்ல. மாறாக அவை தொழிலாள வர்க்கத்தோடு இணைந்ததாக அமைய வேண்டும். மிகுந்த ஆர்வத்துடனும், திட நம்பிக்கையுடனும் தொழிலாள வர்க்கத்திற்காக உழைக்கின்ற அதேவேளை, பெண் உரிமைக்காகவும் உழைக்கின்ற தொழிலாள வர்க்கப் பெண்கள், பெண்கள் தினத்தோடு இணைந்து கொள்கிறார்கள். □□□

## ஒரு நாள்.....



சிரிப்பைச் சிந்திய மிளகாய்ப்பழங்கள்
சரக்கோடு சேர்ந்து
அம்மியில் அரைந்தாற்போல்,
சிரித்துக் குதூகலித்து
கும்மாளமிட்டு குலவையிட்ட
அழகான இளம்பராயம்
இப்படித்தானே சக்கரத்திலிட்டு
அரைக்கப்பட்ட தெனவாயிற்று

சூட்டியக்கா சுதர்சனண்ணா
பகலவன் பத்திமாக்கா
அன்பரசன் ஆப்தீனண்ணா
குருசுமுத்தன் குல்தூம்
எல்லாரும் கூடியாடி விளையாடிய
ஆலையடித் திடலுக்கு
அனுமதியில்லை இப்போ
நான் சென்று விளையாட

ஏனென்றால்.....??
ஏனென்றால் வயதுக்கு
வந்துவிட்டேனாம் நான்.

குதித்தாடக் குமரிகள்
அடுக்குமோ
அன்னமோ அநியாயமோ
என்றுதானே
ஓட்டைக் கிண்ணியால்
தன் தலையில் தானே
அடித்துக் கொள்கிறாள் அம்மா.

அடைபட்ட வேலிக்குள்ளிருந்து
பொத்தல் நீக்கி எட்டிப் பார்த்தால்
பருக்கைகளுக்கு அலையும் காகங்களும்,
பல்லுக்கு இதமாய்
எலும்பு தேடும் நாய்களும்
சுற்றித் திரிகின்றன

இப்படித்தானே ஓர் நாள்
முன்பின் தெரியா யாரோ ஒருவனிடம்
மொத்தமாய் ஒப்படைக்கப் பட்டேன்.
ஆங்கிலக்கொப்பித்தாளின்
நான்கு றூல்களைப்போல
எனது நாலாபுறமும்
றூல்கள், றூல்கள்....

இப்போ
எனது வாழ்வை
நானே அம்மியிலிட்டு அரைக்கவும்
பணிக்கப் பட்டவளானேன்.

ஒரு நாள் நான்
நிமிர்ந்தெழுவேன்.

ஒருநாள் எனது
ஓங்கிய கைகளில்
இரும்புச்சம்மட்டி நிமிர்ந்து நிற்கும்.

ஆர்த்தி-

## பனங்கிழங்கும்
## பாட்டாளிப் புரட்சியும்.....

-திரைமீளன்-



பனம்பாத்தியில் கிழங்கு பிடுங்குவதென்றால் அலாதிப் பிரியம்.
எங்கட ஆச்சி சின்னத்தங்கம் ஒவ்வொரு சீசனுக்கும் மூன்று பெரிய பாத்திகள் வைப்பா.
ஒன்று முளை விடத் தொடங்கியதும் தகன் (பூரான்) வெட்டிச் சாப்பிடுவதற்காக.
அடுத்து,
பச்சைக் கிழங்கு காய வைப்பது ஒடியல் மாவுக்கு,
அவித்த கிழங்கு காய வைப்பது புழுக்கொடியலுக்கு,
மற்றும் அன்றாடம் அவித்துச் சாப்பிட.

அவித்த கிழங்கோடு தேங்காய்ப்பூவும், சீனியும் கலந்து உரலில் இடித்து உருண்டை உருண்டையாகவும் அப்பப்போ கிடைக்கும்.
ஸ்ரீமாம்மாவின் அரசாங்க காலத்தில் இவை மிகப்பெரும் வரம், தேவாமிர்தம். சிலவேளைகளில் மூன்று நேரச் சாப்பாடும் இவை சார்ந்ததாகவே இருக்கும். கூடவே மரவள்ளியும், சங்கக் கடையில் எப்போவாவது கூப்பனுக்குக் கிடைக்கக்கூடிய வெள்ளைப்பச்சை அரிசியும், வண்டுகளும் விதவித புழுக்களும் புகுந்து விளையாடும் அமெரிக்கன் மா-வில் வாட்டிய ரொட்டியும்.

பாத்தியிலிருந்து பனங்கிழங்கு கிண்டும்போதும் தகனும் கிடைக்கும்.
ஆனால் கிழங்கு வந்த விதைகளிலிருந்து நல்ல தகன் கிடைக்காது. தண்ணீராக இருக்கும். அல்லது பழுத்துக் கூழாகி இருக்கும். எங்காவது ஒன்றிரண்டு ஓரளவு தேறும்.

பனங்கிழங்கு பிடுங்குவதுபோல புரட்சிக் கிழங்கு புடுங்குவது இலகுவானதென்ற நினைப்போ என்னவோ...
எடுபட்டுப் போய், நடுவழியில் கந்தறுந்து கட்டையில ஏறி வந்து தலைமறைவாக இருந்த காலங்கள் இப்போ நினைவுக்கு வருகின்றன.

இப்போ பனங்கிழங்கும் புடுங்க முடியவில்லை,
பாட்டாளிவர்க்கப் புரட்சியும் புடுங்க முடியவில்லை. ●

---

### மலையக மக்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு நீண்ட கால போராட்டம் நிறைவு.

இலங்கை வாழ் மலையக மக்கள் பல வருடங்களாகத் தமது சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிக்குமாறு வலியுறுத்திப் போராட்டம் நடத்தி வந்தனர். அம்மக்களின் போராட்டம் அண்மைக் காலமாக உக்கிரமடைந்த நிலையில், மலையகத் தொழிலாளர்களினது நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதாக அரசு அறிவித்துள்ளது.
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பங்குனி 5ஆம் திகதியிலிருந்து சம்பளம் அதிகரிப்பதாக அறிவிக்கபட்டுள்ளது. அதேவேளை இந்தச் சம்பள உயர்வுக்குப் பல நிறுவனங்கள் எதிர்ப்பினையும் காட்டி வருகின்றன.
வருடத்தில் எத்தனை நாட்கள் வேலை என்கிற விடயமும் தீர்வு எட்டாப் பிரச்சனையாகவே உள்ளது. அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**Radio Tamil Bergen Then Tamil Osai**
Organisasjonsnummer: 980305414

NRT
Norway Radio Tamil

தேன் தமிழ் ஓசை
30 ஆண்டுகள் நெடும்பயணம்

Ansvarlig redaktør: Julius Antonipillai
Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.

Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com



Smihuset AS



Gjerde & Rekkverk
Glassrekkverk
Porter
Balkonger
Baldakin & Takoverbygg
Rustfrie deler
Håndløper & Gelender
Lakkerte deler
Skruer, Bolter & Verktøy
Øvrige Produkter

Kontakt: Hardanger vegen 539,
5268 Haukeland.
E.Post: post@smihuset.no
Telefon: 41 07 07 07



FOOD WAYS
INTERNASJONAL DAGLIGVARER



Kontakt tlf: 46419807
Åpningstider: Man- lør: 10:00-18:00, Søn :Stengt
Lodin Leppsgate 1, 5003 Bergen

## ஈஸ்டர் தாக்குதல் - கொடூரமான மனிதப் படுகொலை




கொழும்பில் கறுப்பு ஞாயிறு போராட்டம் 2021 மார்ச் 7ஆம் திகதி நடைபெற்றது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி உயிர்ப்பு ஞாயிறு அன்று இலங்கையில் பல கிறிஸ்தவ ஆலயங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும் குண்டுவெடிப்புகள் நடைபெற்றன. கிட்டத்தட்ட 253 பேர் வரையில் கொல்லப்பட்டனர். 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கொழும்பு கொச்சிக்கடை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்களில் உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி நிகழ்வுகள் நடைபெற்றபோது குண்டுகள் வெடித்தன. ஏனைய குண்டுகள் கொழும்பின் நடுப் பகுதியில் அமைந்திருந்த சங்கிரி-லா உணவகம், சினமன் கிராண்ட் உணவகம், கிங்ஸ்பெரி உணவகம் ஆகிய மூன்று ஐந்து நட்சத்திர உணவு விடுதிகளில் வெடித்தன. இத்தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பலர்கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளின் ஊடாக பல்வேறு தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இந்த நிலையில், ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டு இரண்டு வருடங்களை எட்டவுள்ள நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் யுவதியொருவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 24 வயதாகும் இளம்பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர், பிரதி போலீஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் போலீஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் பல்வேறு முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை கடந்த 2021 மார்ச் 7ஆம் திகதி ஞாயிறு தினத்தன்று கறுப்பு ஞாயிறு தினத்தை அடையாளப்படுத்தும் வகையில் கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்தில் ஆர்ப்பாட்டமொன்று முன்னனெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து பௌத்த மதகுருமாரும் பங்கேற்றுள்ளனர். போராட்டத்தில் பங்கேற்றவர்கள் அனைவரும் கறுப்பு ஆடைகளை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.
'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இது கைதேர்ந்த ஒருவரால் திட்டமிடப்பட்ட மனிதப் படுகொலை, இதில் நேரடியாக தொடர்புடையவர்களுக்கும் கடமைகளைத் தவறவிட்டவர்களுக்கும் சட்டம் நீதி வழங்கட்டும்' என்ற வாசகம் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று இடம்பெற்ற மிகவும் கொடூரமான தற்கொலை குண்டு தாக்குதல்களுடன் நேரடி தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு வலியுறுத்தி கத்தோலிக்க சபை அறிவித்துள்ள ' கறுப்பு ஞாயிறு' தினம் நாடளாவிய ரீதியில் அனுஸ்டிக்கப்பட்டதோடு, பல இடங்களிலும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. □□□




பேர்கன் நகராட்சியில் இருந்து நோர்வேயின் வேறு நகர பகுதிளுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ பயணிப்பவர்கள் மீண்டும் பேர்கன் நகருக்கு வருகை தரும் போது, அவர்கள் கொரோனா புற்றுநோய் பரிசோதனை செய்து கொள்ளல் அவசியம் என நகராட்சி மன்ற செய்திகள் கூறுகின்றன.

கைத்தொலைபேசி தம்வசம் வைத்திருக்கும் பயணிகள் அனைவருக்கும் S.M.S மூலம் பரிசோதனை செய்வதற்கான தகவல்கள் அனுப்பப்படும். பரிசோதனையினை நினைவூட்டவே இத்தகவல் நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது. புதிய தொற்றுநோய் அலை பரவும் பட்சத்தில் தடுப்பூசி பணியும் அதிகம் தேவைப்படுகிறது.

நகராட்சி தேசிய விதிகளை பின்பற்றி வருகின்றது. அவசியமற்ற பயணங்களை தவிர்க்கவும், சமூகத் தொடர்புகளை குறைக்கவும், பாதுகாப்பு நலன்களை வேண்டும் என நகராட்சி கூறுகின்றது. நாட்டுக்குள் வரும் அனைத்து பயணிகளும் விமான நிலையத்திலோ அல்லது நாட்டின் எல்லையில் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும் எனவும் கோரப்படுகின்றது

---

### உலகக்கிண்ண ski (பனிச்சறுக்கல்) விளையாட்டுப்போட்டி 2021




குளிர்கால விளையாட்டுப்போட்டிகள் இவ்வருடம் ஜெர்மனியில் Oberstdorf என்னும் நகரில் கடந்த மாசி 24 முதல் பங்குனி 7ஆம் தேதி வரை நடைபெற்றது.

மூன்றாவது தடவையாக குளிர்கால உலகக்கிண்ண போட்டிகள் Oberstdorf என்னும் இடத்தில் நடைபெற்றுள்ளது. இதற்கு முன்னர் 1987, 2005ஆம் ஆண்டுகளில் நடைபெற்றுள்ளன. 2021ஆம் ஆண்டுக்கான போட்டிகளில் நோர்வே 31 பதக்கங்களை வென்று சாதனை புரிந்துள்ளது. 13 தங்கப் பதக்கங்களையும், 11 வெள்ளிப் பதக்கங்களையும், 7 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளது. 4 தங்கப்பதக்கங்களையும், 1 வெள்ளிப்பதக்கத்தையும், 2 வெண்கலப்பதக்கங்களையும் பெற்று Østerike இரண்டாம் இடத்தில் உள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பல வழிகளிலும் இப்போட்டிகளையும் பாதித்துள்ளது. உலகக்கோப்பை விளையாட்டுக்கள் நடைபெற்ற பகுதிகளுக்குள் நுழைந்த அனைவருக்கும் பி.சி.ஆர் விரைவான சோதனை குறைந்தது ஒவ்வொருநாளும் செய்யப்பட்டது. அனைத்து பயிற்சிகளும் பார்வையாளர்கள் இல்லாமலே ஏற்பாடு செய்யப்பட்டன. உலகக் கோப்பை விளையாட்டு பகுதிகளுக்குள் நுழைய வேண்டிய அனைத்து விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், பத்திரிகையாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் கொரோனவைரஸ் பரிசோதனையில் எதிர்மறை முடிவினை முன் வைக்க வேண்டியிருந்தது. அதேவேளை அனைவரும் கொரோனா தொற்று நோய் கட்டுப்பாட்டு விதிகளை கடைப்பிடிக்க வேண்டுமென கட்டுப்பாடுகள் பலமாகவே போடப்பட்டிருந்தன. இருப்பினும் சில பரிசோதனைகள் நேர்மறை முடிவுகளை உறுதிப்படுத்தின. இதனால் பலரை விளையாட்டிலிருந்து விலக்கியும், சிலரை தனிமைப்படுத்தியும் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம்



இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் தொடர்கின்றது.

நீதி வேண்டிய இந்தப் போராட்டம் நல்லூர் நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.
இந்நிலையில், யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, மரியாதை நிமித்தமாக நல்லை ஆதீன குருமுதல்வரைச் சந்தித்திருந்தார்.

குறித்த சந்திப்பினை முடித்துத் திரும்பும் வழியில், உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோரால் கோசங்கள் எழுப்பப்பட்ட போதிலும் போராட்டத்தில் ஈடுபடுவோரை இந்திய உயர்ஸ்தானிகர் சந்திக்காமலேயே சென்றிருந்தார். இந்நிலையிலேயே, போராட்டத்தில் ஈடுபடுவோர் கவலையை வெளியிட்டுள்ளனர்.
இதேவேளை, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதன் ஊடாக, இலங்கை அரசாங்கத்தினால் புரியப்பட்டுள்ள போர்க் குற்றங்கள், மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனத்திற்கு எதிராக இனவழிப்பு என்பவற்றிக்கு சர்வதேச நீதி வேண்டும் என இந்தத் தொடர் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன், தமிழ் இனத்தின் மீதான இனவழிப்புத் தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ் தேசியம் என்பன அங்கிகரிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குழந்தைகளைக் கொல்லாதீர்கள் என்னைக் கொல்லுங்கள்.

### கத்தோலிக்க அருட்சகோதரி ராணுவத்தினரிடம் கெஞ்சல்



மியன்மார் நாட்டில் கடந்த மாசி மாதம் முதல் இராணுவப் புரட்சி ஏற்பட்டு, அந்நாட்டு ஆளும் அரசை இராணுவம் கவிழ்த்து நாட்டுத்தலைவர் ஆங் சாங் சூகி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் வீட்டுக் காவலில், கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தின் செயலை கண்டித்து மக்கள் போராட்டம் அங்கு வெடித்துள்ளது. இதனால் பல மக்கள் அங்கு கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் சில குழந்தைகளை காப்பாற்ற இராணுவத்திடம் கத்தோலிக்க அருட்சகோதரி ஒருவர் முழங்கால்படியிட்டு என்னைக் கொல்லுங்கள் குழந்தைகளை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சியுள்ளார். இச்செயலால் இராணுவத்தினர் அதிர்ச்சி அடைந்து மன்னிப்பு கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
மியன்மாரில் கடந்த ஆண்டு கார்த்திகை மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்று அந்நாட்டின் தலைவர் ஆங் சாங் சூகி தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சி மீண்டும் வெற்றி பெற்றதாக அறிவித்தது. ஆனால் இத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றன எனக்கூறி இராணுவத்தினர் முடிவுகளை ஏற்க மறுத்தது. அத்தோடு ஏற்றுமதி-இறக்குமதி விதிமுறைகளை ஆங் சாங் சூகி மீறியதாக குற்றம்சாட்டி நீதிமன்றம் கைது செய்ய உத்தரவிட்டது. இந்நிலையில் இராணுவம் அதிரடியாக நாட்டின் ஆளும் கட்சியின் முக்கிய அரசியல் தலைவர்களை கண்டித்ததுடன், ஆட்சியையும் கைப்பற்றியது. ஒரு வருடத்துக்கு நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெறும் என்றும், அதன் பின்னர் தேர்தல் நடாத்தி வெற்றியாளரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

## Women’s Day protest




சர்வதேசப் பெண்கள் தினத்தை முன்னிட்டு கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கண்டித்தும், பெண்களின் உரிமைகளைக் கோரியும் சுதந்திர வர்த்தக வலயத்தில் பணி-புரியும் பெண் தொழிலாளர்களின் போராட்டம்

Women’s Day protest - Katunayake FTZ
Scenes at the Katunayake Free Trade Zone today, where workers gathered to protest to mark International Women’s Day.
Dabindu collective Sri Lanka Standup Movement Lanka Revolutionary Existence for human Development - RED Shramabhimani Kendraya



## உன்னை நீ பேசவிடு - உமா

குப்பையிலிருந்து கண்டெடுத்த
உடைந்த கண்ணாடித் துண்டொன்றின் முன்
என்னை நிறுத்தியுள்ளேன்

ஏழு மலைகளுக்கும்
ஏழு ஊர்களிற்கும் அப்பாலிருக்கும்
வெண்பனித் தேகமும்
சிவந்த உதடுகளும்
கருங்கூந்தல்களையும்
கொண்ட அழகிகளைப் பற்றி
நான் கேட்கப்போவதில்லை

உதிரம் கொட்டும் என் உடலை
இன்னும் காயப்படுத்தப்போவதில்லை

பழத்துண்டால்
சீப்பால் உடலேறிய நஞ்சையும்
இறுக்கிய ஆடைகளில்
தொலைத்த மூச்சுக்காற்றையும்
விடுவிக்க
இளவரசரின் முத்தங்கள்
எமக்குத் தேவைப்படாது.

கண்ணாடிப் பெட்டிகளிற்குள்
எம் ஆன்மாவையும்
உடலையும் அடக்கி
வதைக்கும்
‘மீட்பர்களின்‘
நெஞ்சுதைத்து
எம்மை நாம்
பேசவைப்போம்.




Dr. விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist, Oslo, Norway)

கேள்வி: எனக்கு bypass செய்து இரண்டரை வருடங்கள் ஆகின்றது. ஆனால் bypass சிகிச்சையால் ஏற்பட்ட நெஞ்சுத் தழும்பின் உட்பகுதியில் பச்சைப் புண்போல நோவு இருக்கின்றது. இந்த நோவு இப்படித்தான் இருக்குமா, காலப்போக்கில் மறைந்து விடுமா? இதற்கான மேலதிக சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமா?

பதில்: பொதுவாக சத்திரசிகிச்சை முடிந்து சில வாரங்களில் பலருக்கும், சில மாதங்களின் பின்பும் நோ முற்றாக மாறுவது வழமை. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலருக்கு அது தொடரலாம். சத்திர சிகிச்சை முடிந்த ஆரம்பநாட்களில் கவனக் குறைவால் கைகளை பாவித்து பாரமான வேலை செய்வது, மற்றும் சிலருடைய தசைநார்களின் இயல்பு காயங்கள் மாற நீண்டகாலம் எடுப்பது என்பன இதற்கு காரணங்களாகக் கூறப்படுகின்றது.
நீங்கள் செய்யவேண்டியது: உங்கள் குடும்பவைத்தியர் மூலமாக வைத்தியசாலையிலுள்ள இதய அறுவைச் சிகிச்சை பிரிவின் வெளிநோயாளர் பகுதியிலுள்ள சத்திரசிகிச்சை நிபுணரிடம் சென்று உங்கள் நோவின் தன்மை, இடம், நோ ஏற்படும் சந்தர்ப்பங்கள் என்பவற்றை விளக்கமாக எடுத்துக் கூறவேண்டும்.
மொழிப் பிரச்சனை இருப்பின் ஒரு மொழிபெயர்ப்பாளரை பயன்படுத்தி பிரச்சனையை சரியாக விளங்கப்படுத்துவது அவசியம். உங்கள் தகவல்களின் அடிப்படையில் பரிசோதித்து, தேவை ஏற்படின் மேலதிக பரிசோதனைகளும் செய்து உங்களுக்கு சரியான விளக்கமும், முடிந்தால் சிகிச்சையும் கிடைக்கும்.

கேள்வி: கடந்த 25வருடங்களாக புகைத்தல் பழக்கமுடைய எனக்கு 18மாதங்களுக்குமுன் இதய அறுவைச் சிகிச்சை (bypass operation) செய்யப் பட்டது. அதிலிருந்து புகைத்தலை ஒருவருட காலம் நிறுத்தியிருந்தேன். இப்போ கடந்த 6மாதங்களாக அப்பழக்கத்துக்கு மீண்டும் ஆட்பட்டு விட்டேன். இதனால் ஏற்படும் விளைவுகள், மற்றும் இதனை நிறுத்தும் ஆலோசனைகளைத் தர முடியுமா?

பதில்: புகைப்பதினூடு உள் எடுக்கப்படும் நிக்கொட்டின் குருதிக்குழாய்களின் உட்பகுதியில் வடுக்களை ஏற்படுத்துகிறது. இந்த வடுக்களில் கொலஸ்தரோல் படிந்து படிப்படியாக இரத்தக்குழாய்களில் அடைப்பை ஏற்படுத்துகிறது. இந்த அடைப்புகளை கடந்து (by-pass) அறுவைச்சிகிச்சை மூலம் சரிசெய்யப்பட்ட குருதிச்சுற்றோட்டத்தை இயலுமான காலம்வரை பேணிப்பாதுகாப்பது ஒவ்வொரு நோயாளியினுடையவும் கடமையாகும். ஆரோக்கியமான உணவு, ஒழுங்கான உடற்பயிற்சி, புகைத்தலை நிறுத்தல் என்பன இவற்றிலடங்கும். புகைத்தலை நிறுத்த chewing gum, Plaster, el-cigarette என பல முறைகள் இருக்கின்ற போதும் ஒருவர் தனது உடல்நலத்தையும், தன்னில் அன்பு செலுத்துவோரையும் கருத்தில் கொண்டு «தான் புகைப்பிடிப்பதில்லை» என உறுதியாகவும், ஆணித்தரமாகவும் எடுக்கும் முடிவே புகைப்பழக்கத்தை கைவிட மிகச்சிறந்த முறையென கருதப்படுகிறது.

கேள்வி: மூன்று வருடங்களுக்குமுன் இதய அறுவைச் சிகிச்சை (by-pass) செய்து கொண்டேன். இப்போ அண்மைக் காலமாக தூங்கும் சமயங்களில் அப்பப்போ மூச்சுத்திணறல் ஏற்படுகிறது. அத்தோடு இடதுபக்க மார்பில் மற்றும் தோள்மூட்டில் வலியும் ஏற்படுகிறது. இது ஆபத்தானதா? தங்கள் ஆலோசனை என்ன?

பதில்: பொதுவாக இருதய அறுவைச்சிகிச்சைக்கும், மூச்சுத்திணறலுக்கும் சம்பந்தம் இருப்பதில்லை. இரவில் மூச்சுத்திணறலுக்கு பல காரணங்கள் உண்டு, ஆனாலும் நாசி-தொண்டைப் பகுதிகளின் அமைப்பு, அதிக உடற்பருமன், மதுபான பாவனை, புகைத்தல் என்பன பிரதான காரணங்களாக கூறப்படுகின்றது.
இரவில் மூச்சுத்திணறல் இருப்போருக்கு பகலில் நித்திரைத் தூக்கம், காலையில் தலையிடி, அவதானக்குறைவு, எரிந்துவிழும் தன்மை போன்றவை காணப்படும்.
இந்த அறிகுறிகள் இருப்பின் உங்கள் குடும்ப வைத்தியரினூடாக வைத்தியசாலையிலுள்ள ஒரு நுரையீரல் வைத்திய நிபுணரிடம் சென்று இதனை விளக்கும் பட்சத்தில், முதலில் நீங்கள் உறங்கும் போது ஒட்சிசன் அளவை மதிப்பீடு செய்து அதனை அடிப்படையாக வைத்து ஆலோசனையும், உங்களுக்கு பொருத்தமான சிகிச்சையும் வளங்குவார்கள்.

கேள்வி: 2018 நவம்பர் 15ம் திகதி துரொன்கெய்ம் பெரியாஸ்ப்பத்திரியில் Bypass operation செய்யப் பட்டேன். அன்றிலிருந்து albyl-e enterotablett 75mg, Atorvastatin 80mg, Brilique 90mg, Carvedilol 25mg, Ezetrol 10mg, Nitroglycerin takeda 0.5mg ஆகிய ஆறுவிதமான மாத்திரைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறேன். இவற்றை இன்னும் தொடர்ந்து எடுக்கவேண்டி வருமா, அல்லது இடையில் விட்டுவிடலாமா?

பதில்: மார்படைப்பு ஏற்பட்டு சில மணித்தியாலங்களுக்குள் அடைப்பெடுத்து அடைப்பு இருந்த இடத்தில் குழாய் (Stent) வைத்தால் மட்டுமே ஒரு வருடத்திற்கு Brilique பாவிப்பது வழமை. சிலருக்கு




இதய அறுவைச்சிகிச்சைக்கு முன் இதயத்தசையில் சிறியகாயங்கள் ஏற்பட்டிருப்பினும் ஒரு வருடத்திற்கு Brilique பாவிக்குமாறு அறிவுறுத்தப்படும். நீங்கள் 2019 Brilique நிறுத்தியிருக்க வேண்டும். சிலவேளைகளில் இது ஒரு தவறுதலாகவும் இருக்க வாய்ப்புண்டு. உங்கள் குடும்ப வைத்தியர் மூலமாக வைத்தியசாலையிலிருந்து அனுப்பப்பட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்ய வேண்டும். சரியான காரணங்கள் இதில் கூறப்பட்டிருக்காவிட்டால் வைத்தியசாலையின் ஆலோசனையை மீண்டும் பெறவேண்டும். காரணம், Albyl -E, Brilique இரண்டும் இரத்தத்தை உறையவிடாமல் தண்ணியாக வைத்திருக்க உதவுபவை. தேவையில்லாமல் பாவித்தால் குருதிப் பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. நீங்கள் குறிப்பிட்டுள்ள மற்றைய மருந்துகள் குருதியழுத்தம், நாடித்துடிப்பு, கொலஸ்த்ரோல் அளவு என்பவற்றை அடிப்படையாக கொண்டு கூட்டிக் குறைக்கலாம் ஆனால் முற்றாக நிறுத்துவது புத்திசாலித்தனமல்ல.

கேள்வி: எனக்கு இதய அறுவைச் சிகிச்சை அசய்து 30மாதங்களாகின்றன. இப்போ முளங்காலில் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. bypass operation செய்யப் பட்டதிலிருந்து albyl-e enterotablett மாத்திரை பாவித்து வருகிறேன். இந்த மாத்திரை பாவித்துக் கொண்டிருக்கும் நிலையில் இன்னொரு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முடியுமா?

பதில்: நரம்புத் தொகுதி தவிர்ந்த ஏனைய சத்திரசிகிச்சைகள் Albyl -E யை நிறுத்தாமல் செய்வது வழமை. ஆயினும் உங்களுக்கு முழங்கால் அறுவைச்சிகிச்சைக்கான அழைப்பிதழ் கடிதம் வரும்போது அதில் தவிர்க்கப்பட வேண்டிய மருந்துகள்பற்றிய அறிவுறுத்தல்கள் அடங்கியிருக்கும் எனவே அக்கடிதத்தை முழுமையாகவும், தெளிவாகவும் வாசிப்பது அவசியம். மொழிப் பிரச்சனை இருப்பின் மொழி தெரிந்த ஒருவரிடம் கொடுத்து கடிதத்தை வாசித்தறிவது நலம்.

……………………………………………………………………………….

கேள்வி: அண்மையில்தான் by-pass செய்து கொண்டேன். என் போன்ற அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட நோயாளிகளுக்கான ஆலோசனைகள் தந்து உதவ முடியுமா?
(உணவுப் பழக்கவழக்கம், சரியான உடற்பயிற்சித் தேர்வுகள் போன்றவைகளையும்)

அடுத்த இதழில் எமது வாசகரின் இந்தக் கேள்விக்கு நீண்ட, தெளிவான விளக்கமளிக்கிறார் மருத்துவர் விமலநாதன். □□□

# Oscarsborg



Kavitha Laxmi - Oslo

நோர்வேயின் டிரோபாக் (Drøbak) நகரில் அருகருகே உள்ள இரு தீவுகளின் மேல் கட்டப்பட்ட பிரதான பாதுகாப்புக் கோட்டைதான் ஒஸ்கார்ஸ்பொர்க் (Oscarsborg) கோட்டை.

இக் கோட்டை 1848 ல் கட்டப்பட்டாலும், 1905 ஆம் ஆண்டில் தான் வலுப்படுத்தப்பட்டு முழுமையடைந்ததாக கூறப்படுகிறது.
ஒஸ்லோ நோர்வேயின் தலைநகராக்கப்பட்ட பின்னர், அதன் பாதுகாப்பு கருதி அமைக்கப்பட்ட இந்தக் கோட்டை இன்று தொல்லியல் காப்பகமாகவும், சுற்றுலாத் தலமாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

கோட்டையின் முக்கியத்துவத்தின் பின்னால் இரண்டு மகா உலக யுத்தங்கள் இருக்கின்றன. இதன் இருப்பிடம் நோர்வேயின் புவியியல் சார்ந்து மிக முக்கியமான இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

எந்த நாட்டிலிருந்தும், கடல் வழியாக பெரிய கப்பல்கள் நோர்வேயின் தலைநகரை அடைய வேண்டுமானால் இந்த உட்கடல் வழியே மட்டும்தான் உள்நுழைய முடியும். இக்கடற் பாதையின் நடுவே இரண்டு தீவுகள் இயற்கையாக அமைந்திருக்கின்றன. இத்தீவின் கோட்டை மீது மும்மூன்று தளங்கள் (கிடை மட்டமாகவும், குறுக்கு வெட்டாகவும்) அமைக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாம் உலக யுத்த காலத்தில், ஹிட்லரின் கப்பல்கள் நோர்வேக்குள் நுழைய முற்பட்ட போது, இக்கோட்டையிலிருந்து நிகழ்த்திய தாக்குதல் காரணமாக ஒரு போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த பல நாசிக் கப்பல்கள் பின்வாங்கிச்



சென்றன.
போர்க்கப்பல்கள் மூலம் கோட்டையின் தாக்குதலை வெல்லமுடியாத நாசிப்படைகள் நாற்பதிற்கும் மேற்பட்ட போர் விமானங்களை அனுப்பி கோட்டையை வலுவிழக்கச் செய்தன. பலத்த சேதமடைந்த கோட்டை சிலகாலம் நாசிப்படைகளின் வசமிருந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் மீளமைக்கப்பட்ட கோட்டை மிகவும் விசாலமாக கம்பீரத்தோடும் அழகோடும் காணப்படுகிறது.
சுரங்கப்பாதைகளும், அங்கு ஊடுருவி வரும் ஒளியும் எனக்கென்னவோ பழுவேட்டரையரின் கோட்டைச் சுரங்கத்தையும் சுவரையும் தான் நினைவுபடுத்தியது.

ஆனால், பழுவேட்டரையரின் கோட்டை சுரங்கம் ஒடுக்கமாகவும் இருட்டாகவும் இருந்திருக்க வேண்டும். அவரவர் மண்டைக்குள் அவரவர் கனவுகள், ஏக்கங்கள்.



சுரங்கம் முழுதும் அன்று நடந்து தீர்த்தாலும், போதாமையை உணரத்தான் செய்கிறேன்.

இது வரை நான் பார்த்த பீரங்கி வகைகளிலே மிகப்பெரிய பீரங்கிகளை இங்கு தான் கண்டேன். சிறைச் சாலைகள், நீர் சேமிப்புக் கிடங்குகள், நீண்ட சுரங்கங்கள், கோட்டைச் சுவர்கள், அதைச் சுற்றி வீசும் குட்டி அலைகள், இரண்டு தீவுகளையும் இணைக்கும் பாலம், பல கிளைகளாகப் பிரிந்து செல்லும் உட்கடல், சுற்றியும் பைன்மர மலைகள் என அழகிய காட்சிகளுக்குப் பஞ்சமில்லை.

ஒஸ்கார்ஸ்பொர்க்கிற்கு (Oscarsborg) கப்பலில் மட்டுமே போக முடியும்.
கடல் நீளமும் அத்தனை நீலம்.
கடற்பறவைகள் கடல் நீரோடு பறக்கும்..
சமயங்களில் உங்களோடும். □□□




## நேர்காணல் - கலாபூஷணம் G.P. பெர்மினஸ்



25 SEP 1939 - 09 OCT 2018

ஈழத்தின் மாபெரும் கலைஞர். ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி, திருமறைக் கலாமன்ற மூத்த உறுப்பினர், அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக கலைப் பணியாற்றிய அரங்காற்றுக் கலைஞர், நாடகத் துறைக்காக தன்னை முழுவதுமாக அர்ப்ணித்த கலைஞர். தயாரிப்பாளர், நெறியாளர், ஊர் ஊராய் சென்று முகத்தில் புழுதி அப்பி, சட்டிக்கரியால் மீசையும் தாடியும் வைத்து நடித்துக்கொண்டே நடிப்பு சொல்லியும் கொடுத்த ஓர் மாபெரும் நடிகன். யுத்த காலத்திலும் கலைக்காய் தன்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்து, அடுத்த சந்ததியினருக்கும் கலையைச் சொல்லிக் கொடுத்த ஓர் அர்ப்பணிப்பாளர்.

மரணிப்பதற்கு சில ஆண்டுகளுக்குமுன் நோர்வே வந்திருந்தபோது தேன் தமிழோசைக் கலையகத்தில் நிகழ்ந்த சந்திப்பில் அவரோடு உரையாடிப் பதிவு செய்த கலைப் பயன்பாட்டு வரலாற்றுப் பதிவு இது.

*யூலியஸ்: வணக்கம் கலைஞரே உங்களை எமது கலையகத்தில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி கலையில் குறிப்பாக நாடகக் கலையில் உங்களது நுழைவு, வாழ்வு பற்றி சொல்லுங்களேன்.*

பேர்மினஸ்: நாடகக் கலையில் இன்னும் நான் ஒரு மாணவன். ஏனெனில் நாடக உலகு பாரிய ஒரு சமுத்திரம். அதில் நான் கற்க வேண்டியவை ஏராளம். எனது ஆரம்ப கல்வியை குருநகர் புனித ஜேம்ஸ் பாடசாலையில் ஆரம்பித்து, பின் புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் காலடி எடுத்து வைத்த காலத்திலிருந்து கலைத்துறையில் நான் பங்கு பற்றி இருக்கின்றேன். 1956இல் எனது முதல் நாடகமான ‘ஒரு புகையிரத நிலையம்’ எனும் நாடகத்தின் மூலம் நாடக உலகுக்கு நான் அறிமுகமானேன். பின்னர் புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் பிரமாண்டமான தயாரிப்பான ‘இயேசுவின் திருப்பாடுகள்’ எனும் கலைப்படைப்பு ஆங்கிலமொழியில் அருட்தந்தை லோன் அவர்கள் மேடையேற்றினார். பின்னர் அந்த நாடகம் தமிழில் மொழிமாற்றம் செய்து மேடை ஏற்றியபோது நான் அதிலே முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தேன். ‘இயேசுவின் திருப்பாடுகள்’ நாடகம் எனக்கு நடிப்பின்மேல் பெரும் பற்றினைத் தந்தது.

*யூலியஸ்: பாடசாலை வாழ்க்கையின் பின்னான கலை வாழ்க்கை எப்படி இருந்தது*

பேர்மினஸ்: எனது மண் குருநகர். அந்த மண்ணில் ஒரு சில நாடகங்களை நான் முன்னெடுத்தேன். ஆனால் எனது பாடசாலை மாணவர்களான என்.எஸ்.அன்ரனி, ஜெசிங்கம், ஜேசுதாசன், பி.எஸ்.அல்பிரட், டானிசியஸ் போன்ற நண்பர்களோடு இணைந்து நாவாந்துறையில் தேசிய நாடக கலா மன்றத்தினை உருவாக்கி, அங்கு நாடக பயிற்சிகளை ஆரம்பித்தோம். அந்த மண்ணில் மேடையேற்றிய முதலாவது நாடகமான ‘கூடப்பிறந்தாலும்’ என்ற நாடகம் என்னுடைய நாடக வளர்ச்சிக்கு ஒரு அடித்தளம் அமைத்தது என்று தான் கூற வேண்டும். அந்த நாடகத்தின் மூலம் மக்களை எவ்வாறு கவர்ந்தேன் என்பது ஒரு வரலாறு. அந்த நாடகத்திலேயே என்னை நடிகனாக அந்த நாவாந்துறை மக்கள் ஏற்றுக்கொண்டார்கள், கௌரவம் தந்தார்கள். அதன் பின்னர் ‘மேடர்’ ‘இதுவும் சரிதானா’ போன்ற சினிமா சாயல் கொண்ட நாடகங்களை நடித்துக் கொண்டிருந்த காலத்தில், அருட்தந்தை மரிய சேவியர் அடிகளாரின் நட்பில் இணைந்தேன். அவ்வேளையில் அருட்தந்தை அவர்கள் ஒரு இத்தாலிய கதையான ‘அன்ரனியோ’ எனும் பிரதியினை தமிழ் மொழியாக்கம் செய்து அந்த நாடகத்தின் கதாநாயகன் பாத்திரத்தை எனக்கு கொடுத்தார். அருட்தந்தையின் முதல் கதாநாயகன் என்ற பெருமையையும் நான் பெற்றுக் கொண்டேன்.

*யூலியஸ்: அருட்தந்தை நீ.மரிய சேவியர் அடிகளார், திருமறைக் கலாமன்ற கலை வட்டம், இவர்களுக்கும் உங்களுக்குமான உறவு எப்படி இருந்தது?*

பேர்மினஸ்: திருமறைக்கலாமன்றம் ஆரம்பிக்கும் முன்னமே பாடசாலையில் அருட் தந்தையுடன் எனக்கு தொடர்பு ஆரம்பமானது. நான் மேலே குறிப்பிட்ட நாடகத்தினை தொடர்ந்து உரும்பிராயில் அருட்தந்தை அவர்கள் தயாரித்து அரங்கேற்றிய இயேசுவின் பாடுகள் நாடகத்தில் நடித்தேன். அந்த கால கட்டங்களில் அவரிடமிருந்து நான் கற்றவை ஏராளம். பின்னர் திருமறைக்கலாமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. மன்றமானது இன்று மாபெரும் விருட்சமாகி, இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் பரவி, தமிழர் வாழும் இடமெல்லாம் ஸ்தாபித்து கலைப் பணியாற்றி வருகின்றது.
மன்றத்தில் குருவானரோடு துணையாக நின்று எனது பணியினை ஆற்றி இருக்கின்றேன்.

*யூலியஸ்: திருமறைக்கலாமன்றம் தவிர வேறு எங்கு நீங்கள் எந்த நாடகக்கலையினை கற்றீர்கள்?*

பேர்மினஸ்: யாழ்ப்பாணத்தில் நான் நாடக அரங்க கல்லூரியிலும் இணைந்து நாடகக் கலைப் பயிற்சியினை கற்றுக்கொண்டிருக்கிறேன். நாடக அரங்கக் கல்லூரியில் குழந்தை சண்முகலிங்கம், தாசீசியஸ் மற்றும் எனது நண்பர் பிரான்சிஸ் ஜெனம் அவர்களின் நட்போடு கல்லூரியில் இணைந்து பல நாடகங்களில் நடித்தேன். அங்கும் பல நாடக அனுபவங்களை கற்றுக் கொண்டேன். பொறுத்தது போதும், சங்காரம், உறவுகள், கூடி விளையாடு பாப்பா போன்ற நாடகங்களில் நடித்து, பின்னர் நானும் நண்பர் பிரான்சிஸ் ஜெனமும் திருமறைக் கலாமன்றத்தின் நாடக நெறியாள்கைகளை மேற்கொண்டு பல புதிய நடிகர்களையும் உருவாக்கினோம்.

*யூலியஸ்: திருமறைக் கலாமன்ற நாடகங்கள் பற்றி?*

பேர்மினஸ்: மன்றத்தில் அனைத்து வகையான நாடக வடிவங்களும் உண்டு என்றுதான் சொல்லுவேன். நாட்டுக்கூத்து, இசை நாடகம், நவீன நாடகம் இவ்வாறு எல்லா வகையினையும் அங்கு நீங்கள் காணலாம். நான் குறிப்பிட்டுச் சொல்வதானால் மௌன நாடகங்கள் ஒரு தனித்துவமானது. அதற்கு ஒரு வித்தியாசமான பயிற்சிகள் எடுக்கப்படும். குறிப்பாக அசோகா என்ற மௌன நாடகம் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டது.

முதல்முறை கொழும்பில் மேடையேறிய போது பலராலும் பாராட்டுப் பெற்றது. அந்த




நாடகம் ஒரு வர்க்க ரீதியாக இருந்தாலும், யுத்தம் வேண்டாம் சமாதானமே தீர்வு என்ற சிந்தனையை யதார்த்தமாக மக்களுக்கு எடுத்துச் சொல்லிய ஒரு நாடகமாகும்.

*யூலியஸ்: திருமறைக்கலாமன்றம் நாடகங்கள் மொழி கடந்து யுத்த காலத்திலேயே சிங்களக் கலைஞர்களையும் உள்ளடக்கி இயங்கியமையினை நாம் அறிவோம். அப்படைப்புகள் பற்றி, கலைஞர்கள் பற்றி சொல்லுங்களேன்.*

பேர்மினஸ்: அருட்தந்தை மரிய சேவியர் அவர்களின் பெரும் முயற்சியினால் பேராசிரியர் சரத் சந்திரா, மிரண்டா கேமலதா போன்றவர்களின் உதவியோடு பல சிங்கள கலை குழுக்களோடு நாம் இணைந்து, பல நாடகங்களை மேடையேற்றினோம். முக்கியமாக அசோக்காவும், தர்சனாவும் மாபெரும் தயாரிப்பாகும்.
எல்லாளன் துட்டகைமுனு யுத்தத்தை இணைத்து, அந்த யுத்தத்தால் மக்களுக்கு ஏற்படும் அவலங்களை மக்களுக்கு முன்னாலேயே காண்பித்து, யுத்தமே வேண்டாம் சமாதானமே இந்த மண்ணுக்குத் தேவை என்ற அடிப்படையில் நாடகங்களை அரங்கேற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

*யூலியஸ்: நாடக வடிவம் என்பது அற்புதமான கலை வடிவம். மக்களோடு எளிதாய்ப் பேசவல்ல சிறந்த ஊடகம். இத்துறையில் நீங்கள் இவ்வளவு ஆழமாய் இறங்கி உழைக்க காரணம் என்ன?*



பேர்மினஸ்: நீங்கள் கூறியது போல நாடகம் என்பது மிகச் சிறந்ததொரு ஊடகம். அதன் மூலம் பல வாழ்வியல் அனுபவங்களை மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். நாம் நல்ல மனிதராக வாழ வேண்டும், அதுதான் முக்கியமானது. நாடகத்தின் ஊடாக மனிதத்தை நாம் எடுத்துக் கூறலாம். நாட்டுக் கூத்து, இசை நாடகம், நவீன நாடகம் இவை அனைத்துமே மக்களுக்கு சிறந்த பண்புகளை எடுத்துச் சொல்கிறது. இதனில் எனக்கு மிகப்பெரும் நிறைவு தெரிந்தது. நல்ல சிந்தனைகளை மக்களுக்கு கொடுக்க நாடகமே சிறந்ததொரு ஆயுதம் என நான் அக் காலங்களிலேயே கண்டுகொண்டேன். இவை தவிர எனக்கு நடிப்பிலே மிகவும் ஆழமான பற்று இருந்தது.

யூலியஸ்: ஈழத்தில் கலை நிகழ்வுகள் பற்றி நோக்குபவர்கள் 1970களில் யாழ் மண்ணில் அரங்கேறிய கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளின் பலிக்களம் கலைப்படைப்புப் பற்றி பேசாமல் இருக்க முடியாது. அக்கலை வடிவத்தினை இன்று பார்த்தாலும் நம்மை அதிர வைக்கிறது. அதிலே முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தவர் நீங்கள் அந்த அனுபவங்களைப் பற்றி கூறுங்கள்.

பேர்மினஸ்: 1971இல் ‘அன்பில் மலர்ந்த அமர காவியம்‘ என்ற மாபெரும் கலைப்படைப்பை யாழ் விளையாட்டரங்கில் மேடையேற்றினோம்.
அன்று யாழ் மண்ணில் மாபெரும் வரலாறு படைக்கப்பட்டது. சேகுவேரா என்ற சிங்கள இயக்கத்தின் தலைவர் ரோகண விஜயவீர சிறைப்பிடிக்கப்பட்டு கோட்டை சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவரை சிறையில் இருந்து மீட்பதற்காக அந்த இயக்கத்தை சேர்ந்த பலர் யாழ் மண்ணுக்கு வந்திருந்தார்கள். அவர்கள் சாதுக்கள் வேடத்தில் கோட்டைக்குள் நுழைந்தார்கள். மாலைநேரம் நாங்கள் ஒப்பனை செய்து கொண்டிருக்கும் போது அவர்கள் எங்கள் இடத்தில் நுழைந்து விட்டார்கள். எங்கள் நிகழ்ச்சிக்கு அருட்தந்தை அவர்கள் முதன்முதலாக கொழும்பில் இருந்து ஒலி ஒளி அமைப்புக்கு பராக்கிரமஸ் என்ற மாபெரும் நிறுவனத்தினை வரவழைத்திருந்தார். யாழ்ப்பாணம் முழுவதும் அந்த நிகழ்ச்சிக்குக் கூடியிருந்தது. அந்நிகழ்வு முடிந்து நடிகர்கள் நாங்கள் வெளியேறிக் கொண்டிருந்தோம். கிட்டத்தட்ட 23.30 மணி இருக்கும், மாறுவேடத்தில் வந்தவர்கள் ரோகண விஜயவீரவை சிறையில் இருந்து மீட்பதற்காக கோட்டையைத் தாக்க ஆரம்பித்தார்கள். அதேவேளை எமது நிகழ்ச்சியால் காவல் படையினர் அனைவரும் விழிப்பாய் இருந்தார்கள். வெளியில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் கோட்டையைத் தேடி அடிக்கப்பட்டது. அதன் உதவியோடு காவல்படையினர் அவர்களின் தாக்குதலை முறியடித்தனர். அந்த நிகழ்ச்சியால் யாழ் நகரம் காப்பாற்றப்பட்டது என்று யாழ் பொலிஸ் அதிகாரி அருட்தந்தை அவர்களுக்கு நன்றி கூறினார்.



அதன் பின்னர் அந்த நாடகம் ‘பலிக்களம்‘ என்ற பெயரில் பல இடங்களில் மேடையேற்றப்பட்டது. அப்போது அருட்தந்தைக்கு ஒரு யோசனை வந்தது. இந்த நாடகத்தினை ஒளிப்படமாக்க, (ரெலி ட்ராமா) வேண்டும் என்று. திரு நித்தியானந்தம் அவர்கள் ஒரே ஒரு கேமராவை வைத்துக்கொண்டு அந்த படைப்பினைப் படமாக்கினார். அவர் மிகவும் கலைநுட்பம் வாய்ந்த கலைஞர். அவர் பலிக்களத்தினை ஒளிப்படமாக்க எடுத்த முயற்சி மிகவும் பெரியது. எங்கள் நடிகர்கள் அனைவரும் முதன்முறையாக கேமராவுக்கு முன் நடித்தார்கள். அவர்கள் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் போல் நடித்தார்கள்.

யூலியஸ்: நீங்கள் அரங்க நாடகங்களிலும் வீடியோ ஒளிப்படங்களிலும் நடித்து இருக்கிறீர்கள். இவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள், அதாவது மக்கள் முன் அரங்கில் நடிப்பதற்கும் கமராவுக்கு முன் நடிப்பதற்கும் வித்தியாசம் எவ்வாறு இருந்தது?



பேர்மினஸ்: மேடை நாடகம் உடனடியாக அல்லது நேரடியாக மக்களை சென்று அடையக்கூடிய ஒரு ஊடகம். பார்வையாளர்களின் இரசனையை நேரடியாக கண்டு கொள்ளலாம். மக்கள் முன் தோன்றும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வசனங்கள் பேசும் போது தவறு இல்லாமல் பேச வேண்டும். ஒவ்வொரு அசைவிலும் நடிப்பிலும் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் வீடியோப் படங்களில் நாங்கள் தவறாக நடித்தாலும் பேசினாலும் திரும்பவும் அதனை எடுத்துக் கொள்ளலாம். மேடை நாடகங்களுக்குத்தான் நான் அதிகம் பயிற்சி எடுத்து இருக்கிறேன். மக்களின் இரசனையை நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு மேடை நாடகங்களுக்கே உண்டு. அதிலேதான் எனக்கு மகிழ்ச்சி.

யூலியஸ்: உங்களுக்கு கலாபூசண விருது கிடைத்திருக்கிறது. இந்தக் கட்டத்தில் நீங்கள் கடந்து வந்த கலை வாழ்வு பற்றியும், மறக்க முடியாத நிகழ்வுகள் பற்றியும் எதனைக் குறிப்பிடுவீர்கள்?

பேர்மினஸ்: அது ஒரு மகிழ்ச்சியான தருணம். இந்த இடத்தில் எனது கலை வாழ்வில் நான் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டேயாக வேண்டும். 1964ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் நான் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற போது, அங்கு சிங்களக் கைதிகளை உட்படுத்தி பல கலை நிகழ்வுகள் நடைபெறும். ஆனால் தமிழ்க் கைதிகளுக்கு எந்தவிதமான சந்தர்ப்பங்களும் இராது. அப்போது ஒரு தமிழ்க் கைதி என்னிடம் ‘ சேர் நீங்க நாடகங்கள் பல நடித்து நெறிப்படுத்துவதாக அறிந்தோம், எங்களுக்கும் ஒரு நாடகம் செய்யுங்களேன்‘ என்று கேட்டார்.



உடனே நான் மேல் அதிகாரிகளோடு தொடர்புகொண்டு சங்கிலியன் என்ற நாடகத்தினை அவர்களுக்கு பயிற்சி அளிக்க ஆரம்பித்தேன். கைதிகளாக இருந்தாலும் நல்ல திறமையுள்ள, பண்புள்ள நடிகர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு விவேகானந்த சபையின் உதவியோடு தேவையான பொருட்களைப் பெற்று, அந்த நாடகத்தினை அரங்கேற்றினேன். வெலிக்கடைச் சிறைச்சாலையில் முதன்முறையாக ஒரு தமிழ் நாடகத்தை அரங்கேற்றியமை எமக்கு மிகவும் பெருமையாக இருந்தது. அது மேலதிகாரிகளுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி வந்து இங்கும் மேலதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, யாழ் கோட்டை சிறைச்சாலை கைதிகளுக்கு ‘சீர் திருந்திய கைதி‘ என்ற நாடகத்தினை பயிற்றுவித்து, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றினேன். மண்டபம் நிறைந்த காட்சியாக இருந்தது. Ticket show வாக தான் ஏற்றினோம். அதில் கிடைத்த வருமானம் சிறைக்கைதிகளின் நலன்புரிச் சங்கத்துக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் அந்த நாடகத்தினை நமது குருநகர் கலை அரங்கத்தில் மேடை ஏற்றினோம். அதற்கு கைதிகளை பொறுப்பேற்றுக் கொண்டு செல்வதில் மிகவும் சிரமம் இருந்தது. ஒரு கைதி ஓடினாலும் உத்தியோகம் போய்விடும், தண்டனை கிடைக்கும் என்றார்கள். இருந்தாலும் நான் பொறுப்பெடுத்து பதினைந்து கைதிகளை என்னுடைய வீட்டுக்கு அழைத்து வந்து ஒப்பனை எல்லாம் செய்து, கலையரங்கில் மேடையேற்றினேன். இதில் கடைசிக் காட்சியில் 3 நடிகர்கள் மக்கள் மத்தியில் இருந்து வரவேண்டும். அப்போ 3 பேரையும் நான் மக்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு பின்னால் நிறுத்திவிட்டு, மேடைக்கு வந்து விட்டேன். அவர்கள் நினைத்திருந்தால் அங்கிருந்து தப்பி ஓடி இருக்கலாம். என்னுடைய வாழ்க்கையே அத்துடன் முடிந்திருக்கும். அவ்வாறு எதுவும் அசம்பாவிதம் நடைபெறவில்லை. நான் எனது கலையை மட்டுமே நம்பினேன். அதுவே என்னைக் காத்தது.



பின்னர் நாடக முடிவில் அனைத்து கைதிகளையும் நான் முறையாகக் கொண்டுபோய் உரிய இடத்தில் சேர்த்தேன். அதே நாடகத்தை அரியாலை சனசமுக நிலையத்தில் மேடையேற்றினேன். அங்கும் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இவ்வாறு பல சம்பவங்கள் உண்டு. இந்தவிடத்தில் என்னைக் கலைப் பயணத்தில் நடத்திச் சென்ற எல்லோரையும் நினைவில் கொள்கிறேன்.

யூலியஸ்: நீங்கள் நாட்டுக்கூத்து இசை நாடகங்களில் நடித்த அனுபவம் உண்டா?

பேர்மினஸ்: நான் நாட்டுக் கூத்தில் நடிக்க வேண்டுமென அண்ணாவியார் பால்தாஸ், அண்ணாவியார் பெர்க்மன் ஜெயராஜா போன்றவர்கள் ஊக்குவித்து நாட்டு கூத்தினை பயிற்றுவித்து நடிக்க வைத்தார்கள். கலைஞர் தைரியநாதன் அவர்கள் இசையை நாடகத்தையும் எனக்கு கற்றுத் தந்தார். இவ்விதமாக பலர் எனது கலைவாழ்வுக்கு பின்னால் இருந்தார்கள். முக்கியமாக என்னுடைய வெற்றிக்கு பின்னால் என்னுடைய மனைவி இருக்கிறார். இதனை நான் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

யூலியஸ்: சிங்கள கலை நெறியாளர்களிடம் நடித்த அனுபவம் ஏதும் உண்டா?

பேர்மினஸ்: இரண்டு பெரிய நெறியாளர்களின் திரைப்படத்தில் நடித்து இருக்கிறேன். அசோகா கந்தகமவினுடைய நெறியாள்கையில் ‘இவ்வழியால் வாருங்கள்‘ என்ற A9 பேர் கொண்ட வீடியோ திரைப்படத்திலும், தர்மசிறி பத்துராஜா, இவர் பொன்மணி திரைப்படத்தை தயாரித்தவர். அவருடைய வீடியோ திரைப்படத்திலும் எனக்கு முக்கிய பாத்திரம் கொடுத்து நடிக்க வைத்தார். இந்த இரு சிங்கள நெறியாளர்களிடத்திலும் நடிக்கும்போது அவர்களை அவதானித்து பல நுணுக்கங்களை அவர்களிடத்தில் இருந்து கற்றுக் கொண்டிருக்கிறேன். □□□



## Tverrpolitisk Solidaritetsgruppe For Sri Lanka /Øst Timor

ஸ்ரீலங்கா, கிழக்குத்திமோர் நாடுகளுக்கான நோர்வேயின் சகல அரசியல் கட்சிகள் குழு பேர்கன் நகரில் 1983ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. இக்குழுவினால் இலங்கை மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக நோர்வே வெளியுறவு அமைச்சர் Ine Eriksen Søreide அவர்களுக்கு மடல் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.
ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் எதிர்வரும் நாட்களில் நடப்பவை, மற்றும் இலங்கையில் இந்த நாட்களில் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை மடல் சுட்டி நிற்கிறது.
2000ம் ஆண்டுக்கு பின்னர் இக்குழுவினை ஸ்ரீலங்கா - கிழக்கு திமோருக்கான நோர்வேயின் சகல அரசியல் கட்சிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Utenriksminister Ine Eriksen Søreide,
Postboks 8114 Dep,
0032 Oslo
Bergen, den 22. febr. 2021
**Menneskerettighetssituasjonen i Sri Lanka**

Menneskerettighetskommisjonens rapport, datert 27.01.2021 til FN's 46. sesjon, er en klar påminnelse om det ansvar verdenssamfunnet har med hensyn til rettferdighet, bærekraft, fred og forsoning i Sri Lanka. Vi viser her til at også Norge var pådriver bl.a. for vedtakene i Menneskerettighetsrådet, og vi er glad for at Norge også følger med i sakens videre utvikling.

FN's høykommisærs rapport for 46' sesjon påtaler Sri Lanka's mangelfulle oppfølging av tidligere krenkelser, noe som har økt risikoen for at menneskerettigetsbruddene vil fortsette i landet. Rapporten viser til bekymringsfulle trender det siste året og fremlegger mange eksempler på straffe-unnlatelser, økt militarisering av statlige funksjoner i tillegg til etno-nasjonalistisk retorikk og økt frykt i det sivile samfunnet. Nærmere 12 år etter at den væpnede konflikten i Sri Laka fikk sin avslutning, er straffeunnlatelser for alvorlige menneskerettighetsbrudd og overgrep fra alle sider, mer forankret enn noensinne i landet under den nåværende regjering som likeledes forhindrer etterforskning av rettsaker proaktivt og reverserer den begrensede fremgangen som tidligere har skjedd.

Co-gruppens utkast til Menneskerettighetsrådet den 19. februar tilfredsstiller delvis Høykommi- særens forventninger beskrevet i rapporten, men langtifra godt nok. Skulle en slik uttalelse gå gjennom i Menneskerettighetsrådet, fordi de fleste av de 47 medlemslandene ikke er opptatt av en bærekraftig utvikling i Sri Lanka eller at deres allianser med de enkelte supermakter går foran grunnleggende menneskerettighetspri nsipper, vil det resultere i et betydelig tilbakesteg i Høykommisærens arbeid for fred i Sri Lanka.

Samtidig med Co-gruppens utkast versjon Ziro, kom det en felles uttalelse – «Sowing the seed of conflict» både fra fremtredende tidligere kommisærer for UNHRC og FN-eksperter. I felles-uttalelsen fremholdes det at Høykommisærens rapport skal berømmes for forebyggende fokus.
I 2009 sviktet det internasjonale samfunnet Sri Lanka. Vi må ikke mislykkes igjen. Siden har vi også lært mye om forebygging.

Det er videre blitt understreket at dette arbeidet forutsetter en oppriktig og effektiv forpliktelse til å adressere de grunnleggende årsakene til krenkelser og konflikter bl.a. ved gjennomføring av overgangsrettslige tiltak, noe den srilankiske regjering hadde forpliktet seg til å etablere allerede i 2015 i henhold til Menneskerettighetsrådets resolusjon av 30/1. De oppfordrer det internasjonale samfunnet om umiddelbart å ta skritt mot rettferdighet og ansvarlighet med sikte på å få avsluttet Sri Lanka's vedvarende voldssykluser.

Vi oppfordrer utenriksministeren om å lytte til Høykommisærens anbefalinger til 46. sesjonen og argumenter som også tidligere høykommisærer i UNHRC og FN-eksperter har kommet med i deres felles uttalelser:
- å legge til rette for at Høykommisærens anbefalinger blir fulgt opp i Menneskerettighetsrådets beslutning.
- på lengre sikt å se utover UNHRC og vurdere om Sikkerhetsrådet eller andre instanser bør kontaktes med henblikk på de srilankiske regjeringers oppførsel i relasjon til UNHRC.

Vi frykter for at fraværet av en massiv tilslutning til tidligere vedtatte resolusjoner i UNHRC
og sviktende støtte til Høykommisærens anbefalte tiltak i rapporten for 46. sesjon, uten et snarlig og totalt opphør av landets undertrykkelse av presse- og ytringsfriheten, vil føre til at den negative utviklingen vil fortsette i lang tid.

Bergen, 22. februar 2021

Tidligere medlemmer av Tverrpolitisk Solidaritetsgruppe for Sri Lanka / Øst-Timor

Elektronisk signatur av:
Are Næss Ingmar Ljones Rune J. Skjælaaen
Laila Dåvøy Ingvild Hakestad Olav Bergmål,
Harry Frøysland, Manuelpillai Soosaipillai

Vedlegg: Sowing-the-Seeds-of-Conflict.pdf
CC: Utviklingsminister, Utviklingsminister Dag-Inge Ulstein

Leder av utenrikskomiteen på stortinget, Anniken Scharning Huitfeldt

# லண்டன் தமிழர்களே...!

**பிரித்தானியாவில் 2021ம் ஆண்டுக்கான சனத்தொகை கணக்கெடுப்பு**

பங்குனி 21ஆம் திகதி அரசாங்கத்தினால் பிரித்தானியாவின் சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கெடுப்பு என்பது தமிழர்களைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமானதாகும். பிரித்தானியாவில் பல லட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், கடந்த தடவை அரசினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் இங்கிலாந்தில் ஒரு லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்றும், 20,000 மக்கள் மட்டுமே தமிழ் பேசுபவர்கள் என்றும் பதியப்பட்டுள்ளது. இதனால் தமிழர்களுக்கு பொதுவாக கிடைக்கக்கூடிய பல சலுகைகள் தடைப்பட்டு விட்டன. அத்துடன் விகிதாசார முறைமைகள் பாதிக்கப்பட்டன. எனவே 2021இல் நடைபெறுகின்ற சனத்தொகை கணக்கெடுப்பில், தமிழர்களாகிய நாம் தமிழர்களே என அரசுக்கு திட்டவட்டமாக பதில் கூற வேண்டியது மிக அவசியமாகும். பிரித்தானியாவில் இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாட்டவர்கள் தமிழினை அன்றாடம் பேசுபவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். பொதுவாய் கூறின் நாம் தமிழர்களே.

சனத்தொகையினை கணிப்பிடுவதற்கு அரசு வெளியிட்டுள்ள படிவத்திலே நாடுகளினைக் குறிப்பிட்டு பிரிவுபடுத்தாது, நாம் எந்த நாட்டவராக இருந்தாலும் 'தமிழர்கள்' என்ற இடத்தில் புள்ளடியிட்டு காட்டுதல் அவசியமாகும். பெரும்பான்மை தமிழ் பேசும் மக்கள் தமிழர்கள் வாழ்கிறோம் என்று சுட்டிக்காட்டும் போது, தமிழர்களுக்கான பல சலுகைகள் கொடுக்கப்படும். குறிப்பாக தமிழர்களது நலனுக்கென நிதி ஒதுக்கீடுகள், பொது காரியங்களில் தமிழ் மொழியை பயன்படுத்துதல், பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பதற்கான வசதிகள், தமிழில் அரசு ஊடகங்களினை ஆரம்பித்தல் போன்ற பல சலுகைகளை அரசு மேற்கொள்ளலாம். எனவே நாம் தமிழர்கள் என்று புள்ளடி இடுதல் அதிமுக்கியமானது என தமிழ் மொழி ஆர்வலர்கள், பற்றாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.


census 2021
Household Questionnaire
England

FREEPOST
Census 2021

We need your help to run the census, which gathers vital information to help plan services such as transport, education and healthcare.
**All households should complete the census on 21 March 2021 or as soon as possible after.**
If you prefer, you can complete the questionnaire online:
1. Go to www.census.gov.uk
2. Enter the household access code on the front of this questionnaire.
3. Answer the questions and select submit.
**Thank you for taking part.**

Professor Sir Ian Diamond
National Statistician

You must take part in the census by law. If you do not, or if you supply false information, you could be fined. Some questions are clearly labelled as being voluntary – it is not an offence if you do not answer these.

**Your information is protected by law.**
Find out more in the leaflet that comes with this questionnaire.

**Complete online**
**www.census.gov.uk**
Your household access code is:

OR fill in this paper questionnaire.

If your address is incorrect or missing, write in your correct address below:
Postcode

**Declaration**
This questionnaire has been completed to the best of my knowledge and belief.
Signature
Date

If you have lost your envelope, please return your completed questionnaire to:
**FREEPOST** Census 2021

**Where you can get help:**
**www.census.gov.uk/help**
Contact Centre **0800 141 2021**
NGT **(18001) 0800 141 2021**
Language helpline **0800 587 2021**

Office for National Statistics
H1

SPECIMEN







Jeg heter Divya og går i 1.klasse.
Jeg bor med amma, Appa, Anna, chinnakka og periyakka.
Jeg spiller håndball og svømmer på fritiden.



Rosi 5år
Jeg bor med mamma og pappa. Jeg snakker norsk og nepalsk.
Jeg liker å se regnbuen, fordi den er veldig fin og har mange farger.



Mathewos 4år
Dette er min familie, Pappa er størst. Jeg bor med pappa, mamma og min store bror. Jeg snakker tigirinsk hjemme og norsk i barnehagen.
Jeg liker å sykle med pappa og store broren min i fritiden.



Yomna 4 år.
Jeg bor med pappa, mamma og mine søsken. Jeg har to store søstre og en store bror. Jeg snakker arabisk og norsk. Jeg har lært meg til å tegne hjerter, og det er veldig fint. I barnehagen leker jeg med min bestevenn Henrik.
Når jeg har fri, liker jeg å gå biltur.

*குழந்தைகளே!*
இந்தச் சிறுவர் பூஞ்சோலை பக்கத்தில் பிரசுரிக்க உங்கள் படைப்புக்களையும் அனுப்பி வையுங்கள்.
உங்கள் நண்பர்களும் மற்றும் பல நாடுகளில் வாழும் உங்களைப் போன்ற சிறுவர்களும் பார்த்து மகிழ்வார்கள் அல்லவா.
உங்களுக்கு விருப்பமானவற்றை வரைந்தோ அல்லது எழுதியோ அனுப்பலாம்.




ஜெயந்தன் நடராஜா (Jeyandan Nadarajah)
பருத்தித்துறை.'. Switzerland



நான் மிகவும் இரசிக்கும் புகைப்படக் கலைஞர்களில் ஒருவர் ஜெயந்தன் நடராஜா (Jeyandan Nadarajah) பருத்தித்துறை/ Switzerland

புகைப்படக் கலைஞர்கள் பற்றிய ஒரு அறிமுகக் குறிப்பை எழுதித்தானாக வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு என்னை உந்தித் தள்ளியதில் இவரது படங்களுக்கும் பெரும் பங்குண்டு.

அப்படி எழுதத் தொடங்கி முதலாவது கலைஞரைப் பதிவு செய்தபோது தோழர் இயக்குநர் புதியவன் இராசையா அவர்கள் ஒரு பத்திரிகைச் செய்தியை எனக்கு அனுப்பியிருந்தார்.

அதில்.....
'வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட ஊரடங்கு
வியாபாரிகளாக மாறிய போட்டோ, வீடியோக் கலைஞர்கள்' என்ற தலைப்போடு வாழைப்பழ வண்டியோடு ஒரு புகைப்படக் கலைஞரின் படமும் செய்தியாகப் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

இந்தப் 'புரட்டிப்போடல்' நிகழ்ந்தது இப்போதல்ல, மூன்றரைக்கிலோ கருவி ஒன்றின் அறிமுகத்தோடு தொடங்கி வைக்கப் பட்டது. Kodak நிறுவனத்தில் பணி புரிந்து கொண்டிருந்த Steven Sasson அவர்கள் 1975இலேயே மூன்றரைக் கிலோ எடை கொண்ட டிஜிட்டல் கமெராவைக் கண்டு பிடித்தார்.

அதனைத் தொடர்ந்து 1981இல் Sony நிறுவனம் filmless> electronic camera (magnetic camera)வை அறிமுகப் படுத்தியது. அதிலிருந்து சுமார் 15வருடங்களின் பின் டிஜிட்டல் கமெராக்கள் சந்தைக்கு வந்தாலும்கூட தொழில்சார் கலைஞர்கள் அச்சமாகவில்லை.
ஆனால், 'வந்ததடி வெள்ளையம்மா உன் காளைக்கு ஆபத்து' என்பதுபோல் தானியங்கி டிஜிட்டல் கமெராக்களை எல்லா நிறுவனங்களும் உலக சந்தையில் கொண்டு வந்து குவித்தபோது லட்சக்கணக்கான தொழில்சார் புகைப்படக் கலைஞர்கள் பணியிழந்து போனார்கள்.

அச்சுப் பிரதிகளாக வெளிவரும் செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகளெல்லாம் பக்கங்களைப் படங்களால் இட்டு நிரப்பின. அவை எந்தவித கலைத்திறனுமற்ற பதிவுகளாகவே பிரசுரமாகின.

ஆனாலும், இதனைத் தமது பெரு விருப்புக்குரிய கலையாக வரித்துக்கொண்ட கலைஞர்கள் தமது 'தேடலும் படைப்பும்' என்ற முயற்சியைச் செய்து கொண்டே இருக்கிறார்கள்.
அத்தகையதோர் கலைஞர்களில் பிடிவாதமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு கலைஞர்தான் நண்பர் ஜெயந்தன் நடராஜா.

ஹார்ட்லி கல்லூரியில் 6ஆவது வகுப்பில் படிக்கும்போதே போட்டோகிராபி சொசைட்டியில் இணைந்து படங்கள் டெவெலப் பண்ணுவதை கற்றவர். ஆயினும், அது தொடரவில்லை. ஓவியத் துறையிலேயே அதிக ஆர்வமாக இருந்தவர்.

படிப்பை முடித்துக் கொண்டு பணி புரியத் தொடங்கியபோதே மீண்டும் புகைப்படக் கலைமீது நாட்டம் கொண்டு இயங்கத் தொடங்குகிறார். பிந்தைய காலத்தில்தான் அவர் புகைப்படக் கலையைக் கையில் எடுத்துக் கொண்டாலும்கூட, அது அவருக்குள் தகன்றுகொண்டுதான் இருந்தது என்பதற்கு அவரது படங்களே சான்றுகளாகும்.

பயிர்களின் பசிய போர்வையால் இழுத்துப் போர்த்தியிருக்கும் விளை நிலங்களைப் போலவும், வானத்தால் வஞ்சிக்கப்படாத மலையருவியைப் போலவும், எண்ணவொண்ணா உயிரிகளைத் தனக்குள் மறைத்து வைத்திருந்தாலும் அடுக்கடுக்கான அலைகளால் ததும்பி ஆர்ப்பரிக்கும் சமுத்திரங்களைப் போலவும் இவரது படங்களில் தரையிலிருந்து வானம்வரை நிறைந்திருக்கும்.



கட்டிடங்களைச் சட்டகப் படுத்தினாலும், கட்டாந்தரையில் காற்று நடந்து போவதன் சாட்சியாக அசைகின்ற மரங்களைச் சட்டகப் படுத்தினாலும், மலைகளுக்கும் கரைகளுக்கும்மிடையே அசையும் அலைகளையும், பறவைகளையும் படமாக்கியிருந்தாலும், கூடவே வானமும் வெறுமையாக இல்லாமல் விரவி நிறைந்திருக்கும்.

திட்டுத்திட்டான முகிற்திரள்கள் அல்லது பனிமூட்டம், சாரல் என காட்சியின் மேற்தளத்தை நிறைவாகவே கொண்டிருக்கும். நிச்சயமாக இதற்கெல்லாம் காத்திருத்தல் என்பது அவசியமாகின்றது. ஒரு புகைப்படக் கலைஞனுக்கு பிரதானமாகத் தேவைப் படுவது 'காத்திருத்தல்' என்ற பொறுமைதான்.

'காத்திருத்தல்'ஐ காமேந்து செய்யும் புகைப்படக் கலைஞர்களின் படைப்புக்களில் இந்தக் 'காத்திருத்தல்' என்பதைச் சொல்லும் படங்களை அதிகம் நாம் காணலாம்.
எனக்குத் தெரிந்து ஒளியை மிகக் குறைவாகவும், இருட்டை அதிகளவிலும் உள்வாங்கிப் படமாக்கும் கலைஞர்களுள் எமது சமூகத்தில் ஓவியர் கருணா வின்சென்ற், ஜெயந்தன் நடராஜா இருவரையும் அடையாளம் காண்கிறேன்.

நண்பர் ஜெயந்தனோடு மறைந்த கருணா வின்சென்ற்றின் படங்கள் பற்றி உரையாடும்போது,
கோப்பை நிறைய இருட்டைக் குவித்து, ஒருசொட்டுக் காரக் குழம்புபோல் ஒளியை ஊற்றிக் குழைக்கும் பக்குவம் கருணாவினுடையது என்பேன். இது ஜெயந்தனுக்குமானது தான்.

இருவருமே நவீன ஓவியர்களும்கூட. அதுவும், மார்க் மாஸ்ரரின் மாணவர்கள்.
ஆனாலும் கருணாவின் புகைப்பட முறைமைகளிலிருந்து ஜெயந்தன் மாறுபடுவது landscape photographyயில்.

பிரான்ஸ் நாட்டின் புகைப்படக் கலைஞரான Henri Cartier,d; landscape photographyயை ஜெயந்தனின் படங்களில் அதிகம் காணலாம்.
அதாவது விசாலமான காட்சிப்படுத்தல். அல்லது அகண்ட சட்டகம்.
(Henri Cartie பற்றிய குறிப்பு இது இல்லையாயினும் அவர் பற்றிய ஒருசிறு தகவலை இங்கே குறித்துச் செல்ல நினைக்கிறேன்-

மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப் படுவதற்கு சற்று முன்பு அவரைப் புகைப்படமாக்கியது இந்த Henri Cartie தான். பின் நாளில் உலகப் பிரசித்தி பெற்ற படமாக அது உலா வந்தது. அந்தப் படத்தையும் இங்கு பதிவு செய்கிறேன்)



தனது கலைத்துறைக்கு உந்துதலாக இருந்தவர்களாக, ஓவியர் மார்க் மாஸ்ரர், ஓவியர் ட்றொஸ்ட்ஸ்கி மருது, ஓவியர் ராஜா, நல்ல இலக்கியத்தைத் இளம் வயதிலேயே அறிமுகப்படுத்திய குலசிங்கம் போன்றோரை ஜெயந்தன் நினைவு கொள்வதுண்டு.

காலங்களைக் கமெராலென்ஸ் வழியே பதிவு செய்து வைப்பதில் மிகுந்த அக்கறை கொண்ட ஜெயந்தன் Covid 19 வருடமான 2020ஐயும் தவறாமல் பதிவு செய்துகொண்டு போகிறார்.
இத்தகைய அவரது பதிவுடனான குறிப்பில் அவர் எழுதுச் செல்வது இப்படி....,

"020 இல் எனது மோசமான படங்கள்
My worst photographs of the year'

2020 என்றால் இன்னும் 100 வருடம் கழித்தும் ஞாபகம் வரப்போவது என்னோவோ Covid 19 தான்.
இந்த வருடத்தின் மிக மோசமான காலகட்டத்தை கடந்து கொண்டிருக்கிறோம். மக்கள் அழிவு, அதிகார மையங்கள் ஆட்டம் கண்டது, மதங்களின் கதவுகள் மூடிக்கொண்டது, மனிதர்களை மனிதர்கள் கண்டால் ஓடி ஒழிவது என எமது வாழ்க்கைக்கு ஒரு reset button தான் இந்த பேரழிவு. இருப்பினும் மனிதாபிமானத்தில் மிக உச்சம் கண்டதும் இந்த நேரத்தில் தான்.

அழகியலை, வண்ணங்களின் பேரழகை பதிவு செய்ய எல்லோரையும் போல எனக்கும் ஆசைதான் ஆனால் ஒரு photographerஆக கடந்த வருடத்தை பதிவு செய்ய வேண்டியது அதைவிட முக்கியம்.

சூரிச் நகர தனிமை, இயலாமை, துயரம் இவையே கீழேயுள்ள படங்கள்.
வரும் வருடம் மாறுதலாக அமையும் என்பது தான் எல்லாரதும் கனவு
Documenting the uncertainty and the dark time of lockdown period in Zurich!"










இந்தத் தொடர் பதிவு பற்றிய தங்கள் விரிவான விமர்சனங்களை எதிர் பார்க்கிறேன்.
இந்தக் கலைஞர்கள் பற்றி நீங்கள் அறிந்த தகவல்களையும் பதிவு செய்யுங்கள்.
நான் அறிந்திருக்க வாய்ப்பில்லாமல் விடுபட்டுப் போகலாம் அல்லவா. அப்படி நீங்கள் பதிவதை நமது இளைய கலைஞர்களும் அறிந்துகொள்ள வாய்ப்பாகும்

-தமயந்தி.




அலையும் கடலும் தரையோடு விளையாடிக் கொண்டிருந்த அழகான பனங்காட்டுக் கிராமம் அது. மக்கள் கூடித் திருவிழாக்கள் கொண்டாடி மகிழ்ந்திருந்தனர். கடலையும் பனையையும் சார்ந்தே அவர்கள் தொழில், வாழ்க்கை எல்லாம்.
பத்து வருடத்திற்கு முதல் இடம்பெற்ற உள்நாட்டுப்போரில் சேதமாக்கப்பட்ட கிராமங்களில் இதுவுமொன்று. ஊரின் காவலரண்களாக இருந்த பனைமரங்கள் வகை தொகையின்றி வெட்டிச் சாய்க்கப்பட்டு தடுப்பரண்களாக போரில் ஈடுபட்டவர்கள் பயன்படுத்தினார்கள். போரின் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்டு சிதறுண்ட இவ்வூரின் மக்கள் சிலர் போரால் நேரடியாக பாதிக்கப்பட்டனர். பலர் இன்னமும் ஊர் திரும்பவில்லை. தற்போது இந்த ஊரில் மக்கள் அதிகம் வாழ்ந்ததற்கான தடையங்கள் தெரிகின்றனவே தவிர, வீதியெங்கும் வெறிச்சோடியே காணப்பட்டது. இந்தக் கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்துக்குச் செல்வதற்கான பாதை காட்டுப்பாதையாகவும் ஒடுங்கிய பாதையாகவும் இருந்தது.

முதல் முதலாக சாம்சன் அந்த கிராமத்துக்கு செல்கிறான். சாம்சன் வேலை விடயமாக இந்த மாவட்டத்திற்கு வந்து நகரத்தில் தங்கி இருக்கிறான்.
அவனுடன் வேலை செய்யும் நண்பர்கள் இந்த ஊரைப்பற்றியும் இங்கு ஒருமுறை போகவேண்டும் என்றும் அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள். அதனால் சாம்சனுக்கும் இந்த ஊரில் என்னதான் இருக்கிறது, போய்ப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் இருந்து கொண்டே இருந்தது. ஆனால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை வேலை முடிந்தவுடன் ஊருக்கு செல்வதற்கு பஸ் ஏறிவிடுவார்கள் நண்பர்கள். சாம்சனும் அப்படியேதான். இம்முறையும் அப்படியே. சாம்சன் மட்டும் இம்முறை ஊருக்குப் போகவில்லை. சனிக்கிழமை நன்றாக நித்திரைகொண்டு ஓய்வெடுத்து விட்டு, ஞாயிற்றுக் கிழமை காலையில் ஸ்கூட்டியை முறுக்கிக் கொண்டு இந்த ஊருக்கு வருகிறான்.

கார்பெட் ரோட்டில் பறந்த அவனது ஸ்கூட்டி மெல்ல நிதானித்துப் பயணிக்கிறது. தற்போது அடர்ந்து வளர்ந்த மரங்களும், செப்பனிடப்படாத வீதிகளும் ச்ச... என்ன இந்த ஊர் இன்னும் முன்னேறயில்ல என்று அலுத்துக் கொண்டானே தவிர, அங்கிருந்த உள்ளக அரசியலை அப்போது அவன் விளங்கிக் கொண்டிருக்கவில்லை. அந்தக் கிராமத்துச் சூழல் ஒருவித அச்சம் கலந்த மனநிலையை அவனுக்குள் ஏற்படுத்தியிருந்தது. கிராமத்தின் நடுப்பகுதி பனைமரங்களால் நிறைந்து கிடந்தது. பெரும்பகுதி குடியிருப்புக்கள் பனங்காட்டின் முன்பக்கமும் கடைப்பகுதியில் சில வீடுகளுமாக அமையப் பெற்றிருந்தன. விசாலமான வளவுகளுக்குள் சின்னச் சின்ன வீடுகளே அமைந்திருந்தன.

மெல்ல ஸ்கூட்டரில் நகர்ந்த படியே பனங்கூடல் கரைகளை கண்களால் மேய்ந்தான். பனங்காட்டின் கடைப்பகுதியில் செறிவாகப் பனைகளால் சூழப்பட்டு நடுவே தென்னோலைக் கூரையும், பனைமட்டைச் சுவருமான கையடக்கக் குடில் தன்னளவில் கம்பீரமாய் நிமிர்ந்து நின்றது. அது பனையாச்சியின் வீடு.

ஸ்கூட்டரை ஓரமாக நிறுத்திவிட்டு பனையாச்சியின் குடிலை நோக்கி நடக்கலானான். அந்த இடம் மற்றைய இடங்களிருந்து சற்று வேறுபட்டிருந்ததையும் சாம்சன் அவதானிக்கத் தவறவில்லை. அந்தச் சிறுகுடிசையின் பெருவளவின் நாற்புறமும் போர்வீரர்கள் போல நெடுதுயர்ந்த பனைகளால் சூழப்பட்டிருந்தது. ‘தனித்து விடப்பட்ட காடொன்றில் நான்‘ என்பதாய் அந்தச் சுற்றாடல் அவனுக்குச் சொல்வதுபோல் இருந்தது. சுற்றிவரப் பனைமரங்களும் நெருக்கமான பனை வடலிகளுமாகக் காணப்பட்டது. பொது வழியிலிருந்து ஆச்சியின் காணிக்குள் உட்செல்லும் ஒடுங்கிய அந்த நடை பாதையில் ஒரே அளவிலான சிறிய பச்சைத்தலை வடலிக்குருத்துகள் நிரைத்திருந்தன. நடைபாதையில் மட்டும் வழிவிட்டு இருமருங்கிலும் வளர்ந்து போயிருந்த குருத்தோலைகள் மெல்லிய காற்றிலாடி, அவனை வரவேற்றன. அந்த எண்ணம் அவனுக்குள் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

அவன் குடிசையை நோக்கி நடந்தான். கனமான அந்த மணல்தரையில் ஒருகாலை ஊன்றி அடுத்த அடியை எடுக்கும்போது விநோதமான ஒலியொன்றை அவனது புதிய கிட்டோ காலணி எழுப்பிக் கொண்டிருந்தது. அந்த சத்தத்துக்கு ஏற்றால்போல அவனது கிட்டோவிலிருந்து முதுகில் வந்து விழும் மணலையும் சேர்த்து ரசித்தபடி அவன் நடந்தான். பனைமரங்களின் கீழ் பழங்கள் குவித்துக்கிடந்தன. இன்னொரு பக்கம் விழுந்த பனைஓலைகள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன, இன்னொருபக்கம் பனம் பாத்தி போடப்பட்டுள்ளது. ஆங்காங்கே சீவப்பட்ட பனைமட்டைகளும் கிடக்கின்றன. பனை மரத்தின் அத்தனை பயன்பாடுகளும் ஒன்றொன்றாய் அவனுக்கு ஞாபகத்துக்கு வருகிறது. எல்லாவற்றையும் தாண்டி சுண்டி இழுக்கும் பழுத்த பழங்களின் மணமும் அவனுக்குள் பேரார்வத்தை தூண்டுகிறது. குடிசையை நோக்கிய அவனது கால்களில் வேகத்தை உணர்கிறான். காட்சிகளும் எண்ணங்களும் தானே இயக்கத்தை தூண்டுவதை உணர்ந்து கொண்டு மனதால் சிரித்தபடி எட்டி நடந்தான்.

குடிசையை நெருங்கி வீட்டில் இருப்போரை அழைத்தபோது பதில் ஏதும் வரவில்லை. குடிசையின் பின்னால் சற்றுத் தொலைவில் பனையாச்சி தனது கைகளால் பனம் பாத்திகளை சமப்படுத்திக்கொண்டு இருந்தாள். அவளுக்கு ஒரு எண்பது வயது இருக்கும். நிமிர்ந்து பார்த்த பனையாச்சி சிரித்த முகத்துடனே ‘ஆரு தம்பி இது‘ எனக் கேட்டாள். இவ்வளவு தனிமைச்சூழலிலும், சற்று கூன்விழுந்துபோன உடலிலும் வெளிப்பட்ட அந்த சிரிப்பானது பனையாச்சியை இளமையாகக் காட்டியது. மனதைரியம் என்பதைப்பற்றிப் பல கதைகளை படித்திருந்தாலும், அது இளமையின் மிடுக்கோடு தொடர்புடையது என்ற அவனது மாயையை நினைத்து தன்னை வெட்கியபோது, ‘தம்பி....‘ எனக் கூப்பிட்டாள். சுதாகரித்துக்கொண்ட அவன் ‘நான் சாம்சன்‘ என்று கூறிக்கொண்டு பனம் பழம் வாங்க வந்ததாகவும் சொன்னான். ‘மரத்துக்கு கீழ கிடக்கிற பழங்களை பாத்து எடு ராசா‘ சொல்லிக் கொண்டு, தானே சில பழங்களை தேர்ந்து எடுத்து ‘இது பனங்காய்ப் பணியாரத்துக்கு நல்ல கழி தம்பி‘ என்று சொல்லிக் கொடுத்தாள்.
பழங்களை பெற்று விட்டு காசை கொடுத்தான் சாம்சன். சிரித்துக்கொண்டே வெட்கம் கலந்து சங்கடப் பார்வையோடு ‘வேணாம் தம்பி‘ என காசை வாங்க மறுத்தாள் பனையாச்சி. ‘இல்ல இதை வாங்குங்கோ‘ எனக்கொடுத்த போது ஒரு சங்கடத்தோடே அதை பெற்றுக்கொண்டாள்.

அருளம்மா என்ற தனது பெயர் பனையாச்சி என மாறியது பற்றிச் சொன்னாள்.
‘இப்ப மீள் குடியேறியிருகிற சிறுசுகளும், சண்டைக்குப் பிறகு பிறந்த குழந்தயளும் பனங்கிழங்கு, பனாட்டு வாங்க வருவினம், அதுகளின்ட தாய் தகப்பன் பன வளவுக்குள்ள இருக்குற ஆச்சி எண்டு சொல்லிச் சொல்லி, அதுகள் என்னப் பனயாச்சி, பனயாச்சி எண்டு கூப்பிட்டதால தான் இந்தப் பேர். முதல் எனக்குப் பிடிக்கயில்ல... பிறகு யோசிச்சனான், இந்தப் பனைகள்தானே எண்ட வாழ்க்க, அதோட சிரிச்சிட்டு விட்டுட்டன்‘
பனையாச்சியின் கண்களிலிருந்து சிறு சிரிப்போடு கண்ணீரும் உதிர்ந்தது...

பனையாச்சியிடம் தொடர்ந்து கதைத்த போது, பத்து வருடம் முன் மக்களால் நிரம்பியிருந்த கிராமம் இப்போ வெறிச்சோடிக் கிடப்பதுபற்றி பல நீண்ட கதைகளைச் சொன்னாள் ஆச்சி. பனையாச்சியும் அவளது கணவனும் போர் நடந்தபோது எங்கும் இடம்பெயரவில்லை இங்கேயே வாழ்ந்துள்ளனர். பனையாச்சிக்கும் கணவருக்கும் பலவருசங்கள் கழித்துப் பிறந்த குழந்தையொன்று சிறுவயதிலேயே இறந்து விட்டதாம். குழந்தையின் இறப்புக்குப் பிறகு பனையாச்சியின் உலகமே இந்தப் பனங்காணியும் கையடக்க ஓலைக்குடிசையும்தான்.

பனைதான் அவர்களுக்கு எல்லாமே. ஓலைப்பாய் வேய்வது, நீத்துப்பெட்டி இழைப்பது, பனங்காய்ப்பணியாரம், பனங்கிழங்கு, ஒடியல் என இவற்றை சனங்களிடம் கொடுத்துத்தான் சீவியத்தை நகர்த்திவருகிறாள் பனையாச்சி.

‘சந்தோசமாகத்தான் இருந்தனாங்கள் தம்பி, இவரெட்ட அப்பவே ஒரு றலிச் சயிக்கிள் இருந்தது. அதில இந்த அயலட்ட எல்லாருக்கும் ஒருகண் தம்பி, அந்த சயிக்கிள்ல ரவுணுக்குப் போய் எல்லாச்சாமனும் வாங்கிக்கொண்டு வருவார். ஒருநாள் ரவுணுக்கு போயிட்டு வரெக்குள்ள போக்கடிக்குக்கிட்ட விழுந்திட்டார். என்ன நடந்ததெண்டு தெரியேல்ல. அதில இருந்து இவர் அந்த சயிக்கிளும் ஓடுறதில்ல‘ என்று சொன்னவள் அமைதியாகி ஏதோ சிந்தனைக்குள் மூழ்கினாள்.

சண்ட உக்கிரமான காலகட்டத்தில்தான் ஆச்சியின் கணவர் உடல்நலம் பாதித்து படுக்கையில் விழுந்தார். அப்போது ஊரைவிட்டுச் சனம் இடம் பெயர்ந்து போனார்கள். ஒருசில குடும்பங்களும், வயதான சிலரும் மட்டுமே இருந்தார்கள். கணவனின் நிலை மோசமாகிச் சென்றபோது பனையாச்சி கைமருந்துகளைக் கொடுத்துத் தனியாளாய் நின்று போராடி தன்னால் முடிந்தவரை இறப்பை தள்ளி போட்டாள். அவரும் இறந்து போகிறார். சில உறவுகள் மட்டுமே இறப்பு வீட்டுக்கு வந்து போனார்கள்.
சிலர் தங்களுடன் வருமாறு அழைத்தனர். பனையாச்சிக்கு தான் வாழ்ந்த பூமியை விட்டுப்போக மனம் ஒப்பவில்லை. ‘வாழுறனோ சாகிறனோ அது இங்கதானெண்டு நினைச்சன். இப்பவும் அப்டித்தான் இந்த மண்ணும் பனையும் என்னப் போக விடுதில்ல ராசா. சொந்தபந்தக்களக் குறசொல்ல ஏலாதுதானே தம்பி. சண்ட வலுத்தால் அதுகளுந்தான் என்ன செய்யும் பாவம்? நாசமறுந்த சண்ட எத்தன இழப்புகளத் தந்திட்டுப் போச்சு? இனி எப்பதான் இந்த ஊர்ல சனங்கள் கூடி, திருவிழாக்கள் நடந்து சனத்தின்ர சிரிப்புச்சத்தம் கேக்குமோ?‘ பெருமூச்சோடு முடித்தாள் பனையாச்சி.

‘இந்த ஊர்ல முந்தியெல்லாம் எத்தின பேர் பனயத் தெய்வமா நினைச்சு நடந்ததுகள். இப்பவுந்தான் நிறையப்பேர் வருகினம்.... வந்தென்ன கேக்கினம்....?, இந்தக் காணிய விலைக்குத் தாவனணெ காசு தாறம் எண்டு கேக்கினம். ஏதோ கட்டடம் கட்டப்போகினமாம். ஏன் இந்த காட்ட அழிச்சுக் கட்டிடம் கட்டித்தான் இவைய சீவிக்கவேணுமோ ராசா...? நாலு வெளிநாட்டுக்காசு கையில வந்தால் என்னவுஞ் செய்யலாமெண்டிருக்காமோ சொல்லு தம்பி...? பனயள வெட்டப்படாது எண்ட சட்டமிருந்தாலும் தங்கதங்க பாட்டுக்கு எல்லாரும் வெட்டுகினம். ஏன்...?‘
எவ்வளவு கோபம் பனையாச்சிக்கு?!
அண்ணார்ந்து எதிரே நின்ற பனையைப் பார்த்து ‘இந்த பனயோட அரும தெரிஞ்சாத்தானே இதுகளுக்கு. பனயப்போல பிரியோசனமான ஒரு மரத்தச் சொல்லு ராசா பாப்பம்....?‘
பனைமரத்தோடும் இயற்கையோடும் ஆச்சிக்கிருந்த அந்த நேசம் அடிக்கடி கோவமாய் எட்டிப் பார்த்ததையும், தற்செயல் வாழ்வின் நிலையாமையை அறிந்து தெளிந்த நீராய் அவள் இருப்பதையும் கண்டு அதிசயித்தான் சாம்சன்.

அன்றிரவு பனையச்சியின் நினைவுகளோடு நித்திரைக்குள் ஆழம் கண்ட சாம்சன் நினைவுகளில் கனவுகள் பின்தொடர்ந்தன.
பனையாச்சியின் வளவுக்குள் அந்த குடிசையில் எரிந்த அரிக்கன் லாம்பும் ஒளி மங்கிப் போகிறது. வளவு கச இருட்டாய்ப் படர்கிறது. காற்றின் ஓசை கரும்பனைகளில் பட்டு கீச்சலிட்ட சத்தம் பயங்கரத்தின் அறிகுறியாய் ஓஓஓ..... வென்றிரைந்தது.
கருமை படர்ந்த இருட்டில் சில பகுதிகள் சில உருவங்கள் போல் தூரத்தில் தோன்றின. அவை ஏதோ சொல்ல முற்படுவது போலவும் இருந்தன. மறுபுறத்தில் தூரத்தில் ஜேசிபி இயந்திரங்களுடனும் வேறு இயந்திரங்களுடனும் சிலர் வந்துகொண்டிருந்தனர்.

# Regjeringens anbefalinger for påsken

Nyhet | Dato: 12.03.2021

Det er snart påskeferie, og i den forbindelse kommer regjeringen med anbefalinger for hvordan ferien kan gjennomføres på en smittevernfaglig forsvarlig måte.

Anbefalingene er basert på vurderinger og innspill fra Helsedirektoratet og Folkehelseinstituttet.

– Smittesituasjonen i Norge er ustabil, og i de siste ukene har smittetallene gått opp. Vi er bekymret for konsekvensene hvis mange reiser og møter mange andre personer i påsken, sier helse- og omsorgsminister Bent Høie. Smittesituasjonen følges nøye, og tiltakene kan bli endret på kort varsel.

Anbefalingen om å unngå unødvendige reiser i Norge gjelder også i påsken. Reiser til utlandet frarådes, med mindre det er strengt nødvendig.

– Selv om reiser til fritidseiendommer i Norge ikke anses som nødvendige, kan folk dra på hytta i påsken hvis de tar ekstra smittevernhensyn. Vi anbefaler da å gjøre innkjøpene på forhånd, unngå kollektivtransport hvis det er mulig og å holde avstand til andre, sier Høie.

Hvis du er syk, bør du holde deg hjemme i påsken. Hvis du blir syk på hytta, bør du dra hjem. Hvis du er i karantene eller venter på testsvar, bør du også holde deg hjemme. Personer som bor i områder med mye smitte, for eksempel Oslo, bør unngå å dra på hotell og overnattingssteder der mange samles.

– Vi anbefaler at alle har færre kontakter enn vanlig og at møter og aktiviteter skjer mest mulig utendørs, sier Høie.
Gudstjenester og andre religiøse markeringer en viktig del av påsken for mange. Folk kan delta på gudstjenester og religiøse arrangement der de bor, men bør unngå slike samlinger utenfor egen kommune.

**Dette er anbefalingene for påskeferien**

**Generelt**

- Hold deg hjemme hvis du ikke er frisk, og test deg så snart som mulig hvis du tror du er smittet med covid-19.

**Reiser**

- Reiser utenlands frarådes, med mindre de er strengt nødvendige. Unngå unødvendige reiser i Norge.
- Reise til (egen/lånt/leid) fritidseiendom kan likevel gjennomføres dersom du er særlig påpasselig med smittevern underveis og på feriestedet. Reis da med de du bor med eller tilsvarende nære, gjør helst innkjøpene før avreise og hold avstand til andre.
- Det er viktig å undersøke hvilke tiltak som gjelder i kommunen man oppholder seg i, for eksempel via kommunenes nettsider eller helsenorge.no.
- Hvis du reiser til en kommune med mindre strenge tiltak enn hjemkommunen din, bør du som hovedregel følge anbefalingene som gjelder hjemme.
- Hvis du er i karantene, eller venter på testsvar, bør du ikke dra på påskeferie, heller ikke til egen hytte.
- Er du på hytta og blir syk, bør du reise hjem. Hvis du blir ringt opp og satt i karantene, bør du dra hjem.
- Du kan reise på hotell innenlands, men hold avstand til andre gjester, og begrens opphold i fellesarealene. Hvis du kommer fra et område med høyt smittenivå og strenge lokale tiltak, bør du ikke reise på hotell eller liknende overnattingssted der mange samles.
- Det anbefales ikke å gå fra hytte til hytte, siden dette innebærer betydelig økt risiko for smittespredning.
- Dersom ubetjente hytter skal benyttes, bør det være mulig å reservere på forhånd, slik at ikke flere husstander/reisefølger er der samtidig.
- Dersom hytter ligger vanskelig tilgjengelig, og behov for helsehjelp og mulighet for karantene/testing kan medføre utfordringer for lokale helsemyndigheter, bør det lokalt vurderes om slike hytter bør anbefales stengt.
- Ved strengt nødvendige utenlandsreiser (for eksempel barn som skal besøke foreldre i annet land), er det svært viktig å være forsiktig på reisen og å overholde karantenebestemmelsene og krav om testing når man kommer tilbake.
- Reiselivsaktører bør vurdere å begrense tilgang til fellesarealer, for å redusere smitterisikoen og gjøre det lettere å overholde smittevernanbefalingene.

**Sosialt**

- Du bør unngå flere enn 10 sosiale kontakter i uken.
- Du bør unngå besøk av mer enn 5 personer i eget hjem. Dersom hjemkommunen din anbefaler å unngå besøk, bør du følge dette rådet, enten du er hjemme, på hytta eller annet sted.
- Hvis du kommer fra et område med høyt smittenivå og strenge lokale tiltak frarådes overnattingsbesøk i påsken. Barn og unge under 20 år og aleneboende kan likevel ha overnattingsbesøk av 1-2 faste venner.
- Velg helst utendørsaktiviteter. Unngå å oppsøke steder der mange er samlet, og der det ikke er lett å holde avstand, som serveringssteder, skistuer, varmestuer, lekeland, badeland og liknende. Du kan besøke alpinanlegg, men unngå trengsel.

**Gudstjenester og andre markeringer**

- Ved gudstjenester og andre religiøse markeringer og livssynssamlinger i påsken gjelder regler, retningslinjer og anbefalinger for arrangement. Du bør ikke delta på slike samlinger utenfor din egen kommune.

## ஒஸ்லோ நகரில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ளது. ஒஸ்லோ நகர சபையின் புதிய நடவடிக்கைகள்.

ஒஸ்லோ நகரில் கொரோனா வைரஸ் தொற்று அண்மை நாட்களில் மிக மோசமாக அதிகரித்துள்ளது. எனவே ஒஸ்லோ நகரசபை இக்கட்டத்தில் சில புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. பங்குனி 17லிருந்து சித்திரை 9வரை இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என செய்தி ஊடகத்தின் வாயிலாக நகர சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சிறுவர், இளையோர், பெரியவர் பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்களுக்கு டிஜிட்டல் முறையில் பாடங்களை கற்பிக்க வேண்டும்.

தனியார் வீடுகளுக்கு இரண்டு விருந்தினர் மட்டுமே சென்றுவரலாம்.

சிறுவர்களுக்கான உடற்பயிற்சி நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

உணவகங்களில் இருந்து உணவு அருந்துவதற்கு அனுமதி இல்லை, ஆனால் உணவினை வாங்கிச் செல்லலாம்.

கடைகள் மூடப்பட வேண்டும், அத்தியாவசிய மளிகைக் கடைகள், மருந்தகங்கள் மட்டும் திறந்திருக்கும்.

உடற்பயிற்சி நிலையங்கள், நாடகக் கொட்டகைகள், திரைப்பட கொட்டகைகள், நீச்சல் தடாகங்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள் மூடப்பட்டிருக்கும்.




இறுதிச் சடங்குகளுக்கு சில விதிவிலக்குகள் உண்டு.

பாஸ்கா வாரத்தில் பாலர் கூடங்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் மூடப்பட வேண்டும்.
பாஸ்கா வாரம் முடிந்து சித்திரை ஆறாம் தேதி முதல் சித்திரை ஒன்பதாம் தேதி வரை சிவப்பு நிலையில் அதாவது கடுமையான கட்டுப்பாடுகளுக்கு அமைய திறந்திருக்கும்.




## வெண்திரையின் செந்தாரகை ஒன்று மறைந்தது....



இயக்குநர் எஸ்.பி.ஜனநாதன்

'இயற்கை' படத்தின் மூலம் திரைக்கலைக்கு அறிமுகமாகி, ஈ, பேராண்மை, 'புறம்போக்கு எனும் பொதுவுடைமை' ஆகிய படைப்புக்களைத் தந்தவர்தான் இயக்குநர் எஸ்.பி.ஜனநாதன். அடுத்ததாக, விஜய் சேதுபதி, ஸ்ருதிஹாசன் நடிப்பில் உருவாகி-வரும் 'லாபம்' படத்தின் முடிப்புப் பணியைச் செய்து கொண்டிருக்கு சமயம் உடல்நலக்குறை ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட நிலையில் (14/03/2021) மரணமானார்.

தமிழகத்திலிருந்து தோழர் குமரன்தாஸ் அவர்கள் எழுதிய அஞ்சலிக் குறிப்பினை எமது வாசகர்களுக்காகத் தருகிறோம்.

தமிழ்ச்சினிமா- மிகவும் பிற்போக்கான திசையில் நடைபோட்டுக் கொண்டிருந்த 1990~2010 காலகட்டத்தில் இடதுசாரி சிந்தனையோடு திரைப்படங்களை இயக்கி, அதை வெற்றிகரமாகவும் ரசிக்கும்படியாகவும் தமிழக மக்களுக்கு வழங்கியவர் இயக்குநர் ஜனநாதன்.

தமிழ்ச்சினிமா- பண்ணையார்களையும், தாதாக்களையும், ஜாதிப்பெருமித உணர்வையும், இந்துத்துவத்தையும் போற்றிக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஈ, பேராண்மை, பொதுவுடமை என்ற புறம்போக்கு போன்ற திரைப்படங்களை எடுத்து, அடித்தட்டு உழைக்கும் மக்கள் சார்பாகவும், பழங்குடி மக்கள் சார்பாகவும் சினிமாவில் குரல் கொடுத்தவராகவும் அவர் இருந்தார்.

அவரது பேராண்மை, புறம்போக்கு ஆகிய திரைப்படங்களுக்கு சற்றுக் கடுமையான விமர்சனத்தையும் எழுதினேன்.
அது அவரது தேசப்பற்று மற்றும் பன்னாட்டு முதலாளிய எதிர்ப்பினூடாக மூழ்கடிக்கப்படும் ஜாதிய முரண் என்பதைச் சுட்டிக்காட்டும் தோழமை விமர்சனமாகவே இருந்தது.

ஆயினும் அவரே சமகாலத் தமிழ்ச்சினிமாவின் இடதுசாரிப் போக்கின் முன்னோடியாக இருந்தார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இன்று 2015க்குப் பிறகான தமிழ்ச்சினிமாவின் பயணத் திசையை சரியான பாதையில் திருப்பியவர்களில் அவரும் முக்கியமானவர் என்பதை தமிழ்ச்சினிமா-வரலாறு சொல்லும்.

தோழர் எஸ்.பி.ஜனநாதனுக்கு அஞ்சலிகள்.

-குமரன் தாஸ்-

## Enjoy Enjaami - எஞ்சாய் ஏஞ்சாமி....




பாட்டன் பூட்டன் காத்த பூமி
ஆட்டம் போட்டு காட்டும் சாமி
ராட்டினந்தா சுத்தி வந்தா
சேவ கூவுச்சு
அது போட்டு வச்ச எச்சம் தானே
காடா மாறுச்சு
நம்ம நாடா மாறுச்சு
இந்த வீடா மாறுச்சு

சந்ததி சந்ததியாய் பாட்டி கதைகளைக் கேட்டு வளர்ந்தவர்கள்தான் நாம். நீதிக் கதைகள் மாத்திரமல்லாமல்- காடு மலைகளையும், கடற்பாறைகளையும் வெட்டிப்பிளந்து செப்பனிட்டு, பண்பாட்டு நிலங்களாய், கிராமங்களாய், ஊர்களாய், நகரங்களாய், நாடுகளாய் உருவாக்கிய கதைகளையும், அப்படி இரத்தமும் வியர்வையும் கொட்டி உருவாக்கிய நிலங்களின் மீதான உரிமை மறுக்கப் படுவதையும் நமது பாட்டிகள் நமக்குச் சொல்லித்தான் வந்திருக்கிறார்கள்.

அவர்கள் சொன்ன அத்தகைய கதைகளை இன்று நாம் நமது பேரர்களுக்குச் சொல்கிறோமா என்றால்...... இல்லை என்ற பதில்தானே பெரும்பாலும்.

இங்கே நமது மலையகத்துப் பாட்டிகளில் ஒருவரான வள்ளியம்மை சொன்ன கதைகளை அடித்தளமாக, ஆணிவேராகக் கொண்டு ஒரு பேரன் படைப்பாக ஆக்கியிருக்கிறான். உலகமே கொண்டாடுகிறது அந்தவொரு பாடலை.

இலங்கை மலையகத்தில் இருந்து இந்தியா (தாயகம்) திரும்பிய வள்ளியம்மைப் பாட்டியின் பேரன் அறிவு என்ற இளைஞன் தான் அவன். 'தெருக்குரல் அறிவு' என அறியப்படும் மக்கள் கலைஞன் அறிவு, மற்றும் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் அவர்களின் மகள் தீ இருவரும் இணைந்து பாடியுள்ள பாடல்.
இசையமைப்பாளர் ஏ. ஆர். ரகுமான் உருவாக்கிய தன்னார்வ இசைக் கலைஞர்களை அறிமுகப்படுத்தி ஊக்குவிக்கும் மாஜா அமைப்பினால் இந்தப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது.




அன்னைக்கிளி அன்னைக்கிளி
அடி ஆலமரக்கிளை வண்ணக்கிளி
நல்லபடி வாழச்சொல்லி இந்த
மண்ணை கொடுத்தானே பூர்வகுடி

பாடலைப் பார்க்கவும் கேட்கவும் இந்த இணைப்புக்குச் செல்வோம்.

https://www.youtube.com/watch?v=eYq7WapuDLU

# கடைசிப் பக்கம் Siste Side

måneds bilde



அப்போது எனக்கு இரண்டு வயதுதான். ஆனால் பலநூறு மக்களைக் காவுகொண்டதோடு, அந்தக் கரையோரத்து ஊரையே கடல் விழுங்கிய ஒருபெரும் அனர்த்த நிகழ்வினை எனது கிராமத்தவர் பல வருடங்களாகத் துயரத்தோடு நினைவு கூர்ந்தும், பலவாறாகப் பேசியும் வந்தனர் என்பது இப்போதும் நினைவில் நிற்கிறது.

1964ஆம் ஆண்டு மார்கழி மாதம் 23ஆம் திகதி இரவு வேளையில் மன்னார் வளைகுடாவும் பாக்ஜல சந்தி சமுத்திரமும் சந்திக்கும் இடத்தில் கடும் சீற்றம் கொண்ட கடல் ஒரு ஊரையே தனுக்குள் விழுங்கிக் கொண்டது. இராமேஸ்வரத்தின் கடைக்கோடி ஊரான தனுஸ்கோடியை பிய்த்தெறிந்தது மாத்திரமல்லாமல் பலநூறு உயிர்களையும் பலிகொண்டதோடு, அந்த இரவில் இராமேஸ்வரத்திலிருந்து தனுஸ்கோடியை நோக்கி நூற்றுக்கணக்கான பயணிகளோடு பாம்பன் பாலத்தால் வந்துகொண்டிருந்த புகையிரதத்தையும் கவிழ்த்து, அதில் பயணம் செய்தவர்களையும் கொன்று போட்டது. இந்தக் கதைகளையெல்லாம் யாழ்.தீவகத்தின் கடைக்கோடிக் கிராமமான எனதூரின் மக்கள் பலகாலமாக துயரத்தோடு பேசி வந்தனர். புயல் தின்று துப்பிய எச்சமாக எஞ்சியிருந்த தனுஸ்கோடிக்குச் செல்லும் வாய்ப்பு 11வருடங்களுக்கு முன்புதான் ஏற்பட்டது. ஒரு மயான பூமியில்





நிற்பதான உணர்வில் கால்கள் நடுங்கின. எனது மக்கள், எனது ஊர், எனது கரை என நெஞ்சு படபடத்தது.

‘ஏ கடலே! யுத்தங்கள்தான் மக்களைக் கொல்கிறது என்றால், நீயுமா எனது கடலே?!‘ எனக் கடலைப் பார்த்து உரத்துக் கத்தவேண்டும்போல் இருந்தது. மிக அதீதமாகவே கடலை நேசிக்கும் நான் அன்று கடலைச் சபித்துக் கொண்டேன். கடல் என்ன செய்யும் பாவம். காற்றெழுந்து கடலை உசிப்பியதற்கு கடலை நோவதா?
இப்போதும் இந்த நிலத்தில் அங்குமிங்குமாக அலையும் காற்று கரைமணலை அள்ளியெடுத்துக் கடலில் கொட்டிக் கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான படங்களை இங்கே நான் பதிவு செய்தபோதும், பல நாட்களாக அந்தப் படங்களை மீண்டும் எடுத்துப் பார்க்கவில்லை நான். மனம் ஒப்பவில்லை.

-தமயந்தி-

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com
ISSN 2703-8440